
அருள்மிகு

சட்டநாதர்



பூசை. ச.அருணவசந்தன்

ஸ்ரீ சட்டைநாதசுவாமி பதிகம்

சூலம் ஒருகை மிக்க டமருகம் ஒரு கை எரி
சுடர்வாள் பிடித்ததொரு கை
சொர்ணமயமான அங்குசம் ஒருகை உலகெலாம்
தொழும் அபயம் என்பதொருகை
ஞானமுழுதும் புகழ் கபாலம் ஒரு கை நீண்ட
நாகம்பிடித்த தொருகை
நண்ணுகேடயம் ஒருகை பாசம் ஒருகை விசையே
நாளும் உறு தண்டம் ஒருகை
சீலமுறவே தோளிலில் இட்ட கிண்கிணி மாலை
திகழ்தர விரித்த சட்டை
செம்மேனிமிசை பூண்டு வீரகண்டாமணி
சிரிக்குஞ் சிவந்தபாதா
காலமதில் எளியேன் வருத்தந் தவிர்த்து உனது
தண்கருணை செய்து ஆளுவாய்
தண்நிலா உமிழ் முறுவல் அமுதவல்லிக் கினியே
சட்டை நாதக் கடவுளே.


- நாகை குமாரசாமிக் கவிராயர்

347

உ

அறம் போதிக்கும் அண்ணலே போற்றி!! ஆபதோத்தாரணனே போற்றி!
ஆகாச பைரவா போற்றி! ஆனந்தவல்லி மணாளா போற்றி!! போற்றி!!

அருள்மிகு
சட்டநாதர்



ஸ்வஸ்திஸ்ரீ மன்மத வருஷம் வைகாசி மாதம் 03 ஆம் நாள் (17.05.2015)
ஞாயிற்றுக்கிழமை, சென்னை, மயிலாப்பூர், கிழக்கு மாடவீதியில் அமைந்துள்ள,
வாணியர் தரும பரிபாலன மண்டபத்தில்

அருள்மிகு சொர்ண பைரவநாதசுவாமிக்கு

நடைபெற்ற சந்தணக் குழம்பு அபிஷேக விழாவில்
திருக்கயிலாயபரம்பரைத் திருவாடுதுறை ஆதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்


அவர்களின் நல்லாசியுடன் வெளியிடப்பட்டது

ஆசிரியர் சிவமஞ்சரிச் செம்மல், அருட்பணி அரசு, சிவசேவா ரத்னம்
பூசை.ச.அருணவசந்தன்

சிவசுந்தரி கலைக்கூடம்

29, பீமண்ணமுதலி கார்டன் தெரு
ஆழ்வார்பேட்டை, சென்னை-18, அலைபேசி எண் 9941124964

திருச்சிற்றம்பலம்



நூலின் விவரம்

நூலின் பெயர் : அருள்மிகு சட்டநாதர்

நூலின் ஆசிரியர் : பூசை.ச.அருணவசந்தன்

பதிப்புஆண்டு : முதற்பதிப்பு-17.05.2015(ஞாயிற்றுக்கிழமை);

உரிமை : ஆசிரியருக்கு

பதிப்பாளர்/ஆசிரியர்: **பூசை.ச.அருணவசந்தன்,** ப.எண்.29,பீமண்ண முதலி கார்டன் தெரு
ஆழ்வார்பேட்டை,சென்னை 600 018 **அலைபேசி 9941124964**

பக்கங்கள் : 50 + 6 ஆக 56 பக்கங்கள் + 4

நூல் அளவு : கிரௌன் 1.4 -(24 c.m. x 18.2 c.m.)

அச்சிட்டுள்ள பரப்பளவு: 21.5 செ.மீ.X 15.2 செ.மீ.

பயன்படுத்தப்பட்டுள்ள தாள்: பலாப்பூர் 11.6 கி.பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்துக்கள்: 11.8 ஸ்ரீலிபி

மின் அச்சுக்கோவை : சிவசுந்தரி, 14, செங்கழுநீர் பிள்ளையார் கோயில் தெரு
[சி.பி.கோயில் தெரு], மயிலாப்பூர், சென்னை-4

மறுதோன்றி அச்சகம் : பிரிண்ட் டெக் இந்தியா, சென்னை-600 005,

நூலின் பொருள் : இது அறக்கடவுளின் வடிவமாகத் திகழும் சட்டநாதர் என்னும் சிவபெருமானின் பெருமை களை விளக்கும் நூல். தீயோரை அழித்து நல்லோரைக் காக்கும் அதியுன்னத வீரனாகவும், அன்பர் களுக்கு ஆபத்து நேரிடும் வேளையில் அவர்கள் முன்னே தோன்றி ஆபத்தை விலக்கி அருள்புரியும் ஆபதோத்தாரண மூர்த்தியாகவும் விளங்குபவர் சட்டந.:தர்.இதில் சட்டநாதர் வரலாறு புராணங் கள் போற்றும் சட்டநாதர். சட்டநாதர் ஆலயங்கள் போன்ற அரிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

நன்கொடை விலை : 51 /-

நூலகக் குறியீட்டு எண்: -

முன்அட்டையில் - அருள்மிகு முத்துச்சட்டநாதர் - சீர்காழி

பின் அட்டையில் - அருள்மிகு சட்டநாத சந்திரசேகரர் - நாகப்பட்டினம்

சகலசெல்வம் அருளும் சட்டநாத போற்றி! வரமருள் மூர்த்தி வடுகா போற்றிபோற்றி!
சீலம்காக்கும் சீராளா போற்றி! ஆகாசவாசி அந்தரமூர்த்தி சரபா போற்றிபோற்றி !!



அருள்மிகு சட்டநாதர்

சத்திய மூர்த்தியாகவும், அறத்தின் வடிவாகவும் விளங்கும் சிவபெருமான் அன்பர்களைக் காக்க மேற்கொண்டுள்ள வடிவங்களில் சட்டநாதர் என்பதும் ஒன்றாகும். இவர் பிரபஞ்சத்திற்கும் உயிர்தொகுதிகளுக்கும் சட்டதிட்டங்களை உருவாக்கி அளித்து அதன்படியே அவற்றை நடக்கச் செய்யும் அதி உன்னதர். அவரது ஆணைக்கு உட்பட்டே அனைத்தும் இயங்குகின்றன. அறநெறியில் நடப்பவர்களுக்கு அவர் பாதுகாவலர். ஆபதோத்தாரணர். முறைதவறி நடப்பவர்களுக்கு உக்ரர், அப்படிப்பட்டவர்களைத் தண்டிப்பவர் அதில் நிலைபெயராதவர்.


சட்டதிட்டங்களை உருவாக்கி அளித்துச் செயல்படுத்துபவர் என்பதால் அவர் சட்டநாதர் எனப்படுகிறார். (பண்டைய கருத்துக்களின்படி சட்டநாதர் வழிபாடு அறக்கடவுள் வழிபாடேயாகும்.)

சட்டநாதர் வழிபாடு சில இடங்களில் மட்டுமே இருந்தாலும் அது பழமை மாறாத தனிச் சிறப்புடன் விளங்குகிறது. பெருமை மிக்க சட்டநாதர் வழிபாடு கால ஓட்டத்தில் வைரவ வழிபாட்டின் அங்கமாக ஆகிவிட்டது.என்றாலும்அது மற்றைய பைரவ வழிபாடுகளைப் போலில்லாமல் தனக்கெனத் தனித்தன்மைகளைப் பெற்றதாகவும் இருக் கிறது.

சிவமஞ்சரி வரிசையில் ஸ்ரீ சட்டநாதர் என்னும் பெயரில் மலரும் இந்நூல் பைரவ மூர்த்தங்களில் ஒன்றான சட்டநாதரின் சிறப்புக்கள் வடிவழகு, வழிபாட்டு முறைகள் போன்றவற்றை விளங்குவதாக மலர்கிறது. இந்நூலைப் படித்து சட்டநாதரின் பெருமைகளை அறிந்து அவர் அருளைப் பெற்றுய்ய அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அமிர்தேசுவரியான கற்பகவல்லியும் அவளது காதலன் ஆனந்தபைரவனான கபாலிநாதனும் அன்பர்கள் அனைவருக் கும் இகபர சௌபாக்கியங்களை இனிதே தந்து எந்நாளும் இன்பமுடன் வாழ்விக்க வேண்டுமென்று அவர்தம் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து வேண்டுகிறோம். **வாழி நலம் சூழ - சிவசுந்தரி**

சட்டநாதர் அறக்கடவுள்



சிவ வடிவங்களில் ஒன்றாக இருப்பது சட்டநாதர் வடிவமாகும். இது சிவபெருமானின் மகேசுவர வடிவங்கள் இருபத்தைந்தில் ஒன்றாகவோ, அட்டாட்ட விக்கிரகங்கள் எனப்படும் அறுபத்துநான்கு மூர்த்தங்களில் ஒன்றாகவோ இடம் பெற்றிருப்பதல்லவா? அதையும் தாண்டி உயர் நிலையில் இருப்பதாகும். இது தருமத் தின் வடிவமாகும்.

இவர் அறத்தின் நாயகன். சிவபெருமானின் அறக்கடவுள் வடிவமே சட்டநாதராக இருக்கிறது என்பது உயர்ந்தோர் கருத்தாகும். அவர் தருமங்களை (அறம்) போதிப்பவர் அதன்படி மக்களை நடக்கச் செய்பவர். அதனை மீறுபவர்களை தண்டிப்பவர். அறங்களைப் போதிப்பதைக் குறிக்கும் வகையில் சின்முத்திரை தாங்கியும், தண்டிப்பதைக் குறிக்கும் வகையில் தண்டாயுதத்தையும் ஏந்தியவர். இவர் முகம் கடுமையும், அன்பும் இழைந்தோடு வதாகவே அமைக்கப்பட்டுள்ளது.

அவர் அறம் வளர்த்தீசராக இருக்கி றார். இவரது அம்சத்திலிருந்து தோன்றிய வரே யமதருமன், அவர் அவனுக்குச் சகல அதிகாரங்களையும் வழங்கியுள்ளார். அதனாலேயே அவன் நீதி வழு வாதவனாக இருக்கிறான். அறக்கடவுள் படைத்தவனுக்கு மறலி என்பதுபெயராயிற்று. மறலி என்பதற்கு அறங்காப்பவன் என்பதே (மறம் + இலி) பொருளாகும்.

மேலும் சிலர் ஊழிக்காலத்தே சிவபெருமான் கொள்ளும் கோலமே சட்டநாதர் என்று கூறுகின்றனர். ஊழிக்காலத்தும்அழியாத திருத்தலமாகச் சீர்காழி அவரது தலைமைத்தானமாக இருப்பது இங்கே சிந்திக்கத் தக்கதாகும். இங்கு அவரது ராஜகோலாகல மண்டபமான வலம்புரி மண்டபம் இருக்கிறது. இவருக்கு ஊழிமுதல்வன் என்பதும் பெயராகும்.

சட்டநாதர் வழிபாடு தமிழகமெங்கும் இருக்கும் வழிபாடல்ல. சீர்காழியைச் சுற்றியுள்ள திருவிடைமருதூர், சிதம்பரம், வைத்தீசுவரன் கோயில், இன்னம்பர், அம்பர், அம்பர்மாகாளம், நாகப்பட்டினம், திருமலைராயன்பட்டினம் போன்று ஏறத்தாழ ஐம்பது ஊர்களில் மட்டுமே இருப்பதாகும். இதற்கென தனித்தன்மை வழிபாட்டு முறைகள் இருக்கின்றன.

இவர் அறம் குறைந்து மறம் (அதர்மம்) தலையெடுத்து மக்களை வாட்டும் போது வெளிப்பட்டு அருள்புரி வார். அன்பர்களுக்கு துன்பம் நேரும்போது தானே அங்கு வந்து அந்த துன்பங்களை விலக்கிக் காப்பவர். ஆபத்துக்களை விலக்கி மகிழ்ச்சியைப் பெருக்குபவர். அதனால் ஆபதோத்தாரணர் என்று அழைக்கப்படுகிறார்.

சட்டநாதர் அறிமுகம்

உலகில் மக்கள் அமைதியாகவும், செழிப்பாகவும், பாதுகாப்பாகவும் வாழ நீதி, நியாயங்களைக் கொண்டு வரையறை செய்து முறைப்படுத்தப்பட்ட சட்டதிட்டங்கள் அவசியமாகும்.ஆதியில் மலை முகடுகளிலும், காட்டுப்பகுதிகளிலும் தனித்தனியாக வாழ்ந்த மனிதர்கள் காலகதியில் கூட்டுக் குடும்பங்களாக வாழத் தலைப்பட்டனர். பின்னர், பல குடும்பங்கள் சேர்ந்து ஒன்றாக வாழும் நிலை உண்டானது. படிப்படியாகப் பெருங்கூட்டங்களாக மக்கள் வசிக்கும் கிராமங்கள், நகரங்கள் முதலியவை தோன்றின.

அதற்கேற்ப தொழில் முன்னேற்றங்கள், வளங்கள் ஆகியவையும் பெருகின. வசதியும் வாய்ப்பும் பெருகப்பெருக மக்களிடையே சுயநலமும், பேராசையும் மற்றவரை அடக்கியாளும் மனப்போக்கும் சுரண்டலும் கூடவே வளர்ந்தன.வலி யோர் வைத்ததே சட்டமானது. எளியோர் வலியோருக்கு அடங்கி நடக்க வேண்டிய தாக இருந்தது. அந்நிலைமாறி சமுதாயம் சிறப்பாக நடைபெற எல்லோருக்கும் எல்லா வளமும் நலமும் கிடைக்க சமுதாயத்தைத் தலைமை ஏற்று நடத்த ஒரு மன்னனும், அவனுக்கு அரசாங்கமும் உண்டாயின. அரசன் மக்களை நெறிப்படுத்த ஆணைகளைப் பிறப்பிக்கத் தலைப்பட்டான்.

சமுதாயம் நன்கு செயல்படவும், எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்கவும் ஒவ்வொருவரும் சுதந்திரமாகவும் அச்சமற்று இன்பமாக வாழவும் எல்லோரையும்



சட்டநாதர் - அம்பர்

கட்டுப்படுத்தி வைக்கும் இந்தச் சட்ட திட்டங்கள் தேவைப்பட்டன.

வேதங்களையும், ஆகமங்களையும் அறம்,பொருள், இன்பம், வீடு ஆகிய நாற் பொருளையும் உபதேசித்த சிவபெருமானே மக்கள் முறையாக சிறப்பாக வாழச் சட்டங் களையும் அதற்கான திட்டங்களையும் வகுத்தளித்தான். சட்டங்களை வகுத்து அதனைக் காலங்களுக்கேற்ப விரிவுபடுத்தி விளக்கம் பெறச்செய்துவரும் சிவபெரு மானின் வடிவமே சட்டநாதன் என்பதாகும்.

சட்டநாதன் தனது தனித் தன்மையை மற்றவரிடத்தில் இருந்து வேறுபடுத்திக் காட்டவே நீண்டஅங்கியை அணிந்திருக் கிறான். (இப்போதும் சட்டத்தின் காவலர் களான வழக்கறிஞர்களும், நீதிபதிகளும் அவர்களுக்கான கருப்பு அங்கியை அணிவது இங்கே சிந்திக்கத்தக்கதாகும்.)

சமூகநீதியானது சட்டங்களின் மூல மாகவே எல்லோரையும் அடைந்து அவர் களை அச்சமின்றி சுகமாக வாழ வைக்கிறது. அதே சமயம் அதை மீறுபவர்களை அது கடுமையாகத் தண்டிருக்கிறது. அதைக் குறிக்கும் வகையிலேயே சட்டநாதர் தண்டத்தை ஏந்தியுள்ளார். அவனது தண்டம் சமுதாயப் பகைவர்களையும் சட்ட வரம்பு மீறுபவர்களையும் அடக்கி, அச்சப்படுத்து வதுடன், கடுமை யாகத் தண்டிப்பதுமாகும்.

சட்டநாதரான பைரவர் கபாலத்தை ஏந்துகிறார். இதைக் கபாலம் என்பதைவிட அட்சய பாத்திரம் என்பதே சரியானதா கும்.சட்டமானது அனைவருக்கும் பாது காப்பையும் மன மகிழ்ச்சியையும் உறுதி செய்வதோடு உணவையும், வழங்குகிறது. சட்டநாதர் அனைவருக்கும் உணவளிக்கும் பிரானாக இருப்பதால் அட்சயபாத்திரத்தை ஏந்தியுள்ளார்.

இவருடன் இரண்டு கணங்கள் இருக் கின்றன. வலப்புறம் இருப்பவன் இவரது ஆணையை பூமியில் செலுத்துபவன். அதன் படி நடப்பவர்களுக்கு மகிழ்ச்சியும்,இத மும் உண்டாகச் செய்பவன். இடப்புறம் நிற்பவன் உக்ரன் சட்டத்தை மீறுபவர் களைத் தண்டிப்பவன். அவர்களை மனம், மொழி, மெய்யினால் துன்பத்தை அடையச் செய்பவன்.

சட்டத்தை இயற்றுவோனும் அதை நிலைபெறச் செய்பவனும், ஆன சட்டநாதர் எல்லோரையும்விட உயர்ந்தவர். அவனை யாரும் எளிதில் அணுகி வசப்படுத்திவிட முடியாது என்பதைக் குறிப்பதற்காகவே அவர் மிக உயரமான இடத்தில் வீற்றிருந்து தனது ஆணையைச் செலுத்திக்கொண்டிருக் கிறார்.

இறைவன் சத்தியமூர்த்தியாகவும், நீதி மானாகவும், சட்டங்களை இயற்றி அதன் படி உலகத்தை நடக்கச் செய்பவனாகவும் இருக்கிறான்.அப்படிச் செயல்படும்போது அவன் மேற்கொள்ளும் கோலமே சட்ட நாதன் என்பதை இதன்மூலம் அறிகிறோம்.

அவன் ஆணைகளைச் செலுத்துவதால் ஆணைக்காரன், அந்தரன், அன்பர்களுக்கு நேரிடும் ஆபத்துக்காலங்களில் தானே முன்வந்து அவற்றை விலக்குவதால் ஆபதுத்தாரணன்,செம்மையான வழியில் உலகை நடத்தும் படைகளை உடைய தாலும், தண்டத்தை ஏந்தியிருப்பதாலும் தண்டபாணி, சட்டங்களை வகுத்து அதனை மீறினால் கடுமையாகத் தண்டிப்பவன் என்ற இறையச்சத்தை ஒவ்வொருவர் உள்ளத்திலும் வைத்திருப்பதால் பைரவன். என இப்படியே அவன் தன்செயல்பாட் டினால் அனேக பெயர்களைப் பெற்றுள் ளான்.

வரலாற்று அடிப்படையிலும்,தத்துவங்களின் அடிப்படையிலும் சட்டநாதர் அறக்கடவுள் என்று திரும்பத்திரும்பக் கூறப்பட்டாலும், புராணங்கள் அவரது சட்டையை மையமாக வைத்துப் பல கதைகளைக் கூறுகின்றன. அதன்படியாக முதல் கதையானது திருமால் மேற்கொண்ட வாமன அவதாரத்தை ஒட்டியதாகும்.

வாமனனாக வந்த திருமால் திருவிக்கிரமனராக இருந்து மகாபலியை வஞ்சகமாகப் பாதாளத்திற்குத் தள்ளி அந்த வெற்றிக் களிப்பால் அட்டகாசம் புரிந்த போது, சிவபெருமான் வைரவரை ஏவி, அவரை அடக்கும்படிக் கூறினார். வைரவருக்குத் திருமால் அடங்காது ஆர்ப்பரிக்கக் கோபம் கொண்ட வைரவர் அவரைப் பிடித்து அவரது தோலை உரித்து அதனைச் சட்டையாகப் போர்த்துக் கொண்டும் எலும்புகளைக் கட்டி தண்டமாக ஏந்தியும் அவரது ரத்தத்தையும் கொழுப்பையும் மேற்பூச்சாகப் பூசிக் கொண்டார் என்பதாகும்.

இரண்டாவது கதையின்படி, நரசிம்ம வடிவம் கொண்டு இரணியனை அழித்த பின் திருமால் அட்டகாசம்புரிய பைரவர் அவரைப் பிடித்துத் தோலை உரித்து சட்டையாக அணிந்து கொண்டார் என்பதாகும்.

மேற்படி இரண்டு கதைகளிலும் திருமாலின் தோலை உரித்துச் சட்டையாக அணிந்து கொண்டது திரும்பத் திரும்பக் கூறப்படுகிறது.

இந்தக் கதைகளே திரும்பத் திரும்ப அனைத்துப் புராண நூல்களிலும் கூறப்பட்டுள்ளன. இதுவே சட்டநாதர் பெயருக்கான விளக்கமாக வழிவழியாகச் சொல்லப்பட்டு வருவதாகும்.

கால ஓட்டத்தில் சட்டநாதர் வழிபாட்டில் இப்படிப் பல புராணக் கதைகள், சமயச் சடங்குகள் கலந்துவிட்டன. இவ்வழிபாட்டிற்கும் இவரது திருக்கோலத் திற்கும் பலவிதமான விளக்கங்கள் அளிக்கப் பட்டதுடன், புதிய வழிபாட்டு முறைகளும் புகுத்தப்பட்டுள்ளன என்றா லும், சட்டநாதர் ஊழிமுதல்வன் என்றும் நீதிகளை வரையறுத்து அளித்தவன் நீதிமான் என்று மனதிற்கொண்டு வழிபடுவதே சிறப்பானதாகும்.

சத்திய நெறியில் நடக்கவும், நீதி வழியே சகல சுகங்களை அடைந்து எந்நாளும் இன்பத்தில் திளைத்திருக்கவும் சட்டநாத சுவாமியை வழிபடுவோம். அவரை வழிபடுவதால் வாழ்வில் சகல வெற்றிகளையும் அடையலாம் என்பது உறுதியாகும்.

அன்பர்களுக்குப் பணிவான வேண்டுகோள்

சிவசுந்தரி கலைக்கூடத்தின் மூலமாக பைரவமூர்த்தியின் பெருமைகளை விளக்கும் வகையிலும், பைரவர், அஷ்டபைரவர்,என்னும் நூல்கள் வெளிவந்துள்ளன. இவ்வரிசை யில் அருள்மிகு சட்டநாதர் என்னும் இந்நூல் வெளிவருகிறது. சட்டநாதரைப் பற்றிய செய்தி கள் அதிகமாக இல்லை. கிடைக்கும் செய்திகளும் அவரை ஊழி முதல்வனாகவோ, அறத் தின் கடவுளாகவோ கொள்ளாமல்,பைரவவடிவங்களில் ஒன்றாகவே புனைந்துரைக்கின் றன. இயன்றவை, கிடைத்த செய்திகளைத் தொகுத்து இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. அன்பர்கள் தம்மிடம் இருக்கும் செய்திகளைத் தெரிவித்தால் மேலும் கூடுதலான செய்திகளுடன் இந்நூலை விரிவாக வெளியிடலாம் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சட்டநாதர் வழிபாட்டில் .....

சட்டநாதர் வழிபாட்டிற்கெனத் தனித்த நடைமுறைகள் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றை இங்கே சிந்திக்கலாம் .....

சட்டநாதரைத் தரைமட்டத்திலோ, சிறிய மேடையிலோ நிலைப்படுத்தி வழி படும் வழக்கமில்லை. அவர் ஆகாசத்தில் இருப்பவர் என்பதால், ஆலயங்களில் அதி உயரமான இடத்தில் அவரை அமர்த்தி வழிபடுகின்றனர். பெரும்பாலும் ஆலயத் தில் அதி உன்னதமாகவும், சிறப்பிடமாக வும் இருப்பது கருவறையே என்பதால் கருவறையின் மீது அமையும் ஸ்ரீவிமானத் தில் அவரை அமைக்கின்றனர். அப்படி அமைக்க முடியாத போது, மண்டபங் களின் மீதிலும், இராஜகோபுரத்தின் மீதி லும் அவரை எழுந்தருளி வைத்தும் வழி படுகின்றனர்.

சட்டநாத மூர்த்திக்கு நேரடியாக அவரது திருமேனியில் அபிஷேகம் அலங் காரம் செய்யப்படுவதில்லை. அவருடைய திருமேனியில் புனுகு நெய் மட்டுமே பூசப்படும். சாம்பிராணி தூபமும் இடப் படும். அவருக்குரிய அபிஷேக அலங்காரங் களை அவருக்கு நேர்எதிரில் தரையில் அமைக்கப்பட்டிருக்கும் மலர்ப்பீடத்திற்கே செய்யப்படும். அதில் அவர் தமது பூத வேதாள கணங்களுடன் வீற்றிருந்து அவற்றை ஏற்றுக் கொள்ளுகிறார்.

சட்டநாதருக்குரிய நிவேதனங்களில் வடை மாலையும், முழுத்தேங்காயும் முதன்மை பெற்றதாகும். முற்றிய தேங்கா யில் நெய் நிரப்பி, அதை அப்படியே நிவேதனம் செய்வது வழக்கமாகும்.

பைரவ வடிவம் என்றதும் எல்லோ ருக்கும் அவரது ஆடை அணியாத திசை களையே ஆடையாகக் கொண்ட திகம்பர கோலமே நினைவுக்கு வருகிறது. பைரவ சமயத்தினரின் வழிபடு மூர்த்தியாக இருந்தாலும்,சட்டநாதர் எட்டும்எட்டாத அங்கி போன்ற ஆடையை அணிந்திருக் கிறார். பின்புறம் முதுகை முழுவதுமாக மூடியுள்ள அந்த ஆடை முன்புறம் மார்பையும், வயிற்றையும் மூட முடியாத தாக இருக்கிறது. கைகளிலும் முக்கால் கை வரையே இருக்கிறது. கீழேயும் முழங் காலுக்கு மேலேயே நிற்கிறது. முழுவதும் உடலை மூட முடியாத சட்டையை அணிந் தவராக இருப்பினும் அவர் அந்தச் சட்டை யின் பெயரால் சட்டைநாதர் என்று அழைக் கப்படுகிறார்.

சட்டநாதன் தலைமுடியை முழு வட் டமாக பின்னி முடிந்துள்ளார். அதற்கு வட்டணை என்பது பெயராகும். அவரது ஆயுதம் தண்டாயுதமாகும். தண்டத்தை ஏந்தியிருப்பதால், அவர் தண்டபாணி என்று அழைக்கப்படுகிறார்.

சட்டநாதர் உயர்ந்த மரத்தாலான மிதி யடிகளை அணிந்துள்ளார். மக்கள் ஆணி வைத்த மிதியடிகளை அவருக்குக் காணிக் கையாகஅளிக்கின்றனர்.

சட்டநாதர் மலைமுகட்டில் வீற்றிருக் கும் தெய்வம் என்பதால் அவருக்குக் காவடி எடுக்கும் வழக்கம் உள்ளது. பன்னீரைக் காவடியில் கட்டி வந்து அபிஷேகம் செய் கின்றனர்.

சட்நாதருக்குத் தேன் உயர்ந்த நிவேத னமாக இருக்கிறது. உளுந்தில் செய்த வடைகளைத் தேனில் நனைத்து நிவேதிக் கின்றனர்.


சீர்காழி சட்டநாதர்

சைவ சமய வரலாற்றில் தனியிடம் பெற்றுள்ள தலம் சீர்காழி. ஊழிக்காலத்தும் அழியாத ஒப்பற்ற திருத்தலம்.ஊழிக் காலத்தில் பொங்கும் கடல்மீது ,"ஓம்" எனும் பிரணவம் தோணி வடிவம் கொண்டு மிதக்க, அதில் சிவபெருமான் உமாதேவியுடன் வீற்றிருப்பார் என்கிறது புராணம். ஓர் ஊழிக் காலத்தின் முடிவில் ஊழி வெள் ளம் வடிந்தபோது அத்தோணி நின்ற இடம் இதுவாகும்.அதனால் இதற்குத் திருத்தோணிபுரம் என்பதும் பெயராயிற்று.

ஊழி முதல்வனாய் நிற்கும் சட்டநாதர் வழிபாட்டின் தலைமை இடமாக இருப்பது சீர்காழியே ஆகும். ,"சீர்" என்பது பெருமை தரும் சொல்லாகும். தமிழில்,"காழ்," என்பது வைரத்தைக் குறிக்கும் சொல்லாகும்.உறுதியான வைரம் போன்ற வைரவமூர்த்தி எழுந்தருளியிருக்கும் இடம் என்பதால், இத்தலம் காழி எனப்பட்டது. அது சீர்மை மிகுந்தஇடம் என்பதால் அது சீர்காழி எனப்பட்டது.

சிவபெருமான் சிவலிங்க மூர்த்தியாகவும்,உமையம்மைக்கு உபதேசித்துக்கொண்டிருக்கும் குரு மூர்த்தியாகவும் அடியவர் பொருட்டு அவர்களைக் காக்க வந்த சங்கமர் வடிவாகவும் மூன்று நிலைகளில் எழுந்தருளியுள்ளார்.இதனால் இதனைக் குரு, லிங்க, சங்கமத்தலம் என்று போற்றுகின்றனர்.

இத்தலத்தில் சிவபெருமான் பிரம்ம புரீசுவரர் என்னும் சிவலிங்கமாக எழுந்தருளியுள்ளார். பிரமன் இவரை வழிபட்டுப் பேறு பெற்றுள்ளான். இதற்கு அடுத்ததாக உள்ள சிறிய(கட்டு)மலைமீது தோணியப் பர் எனும் பெயரில் உமாமகேசுவரர் எழுந்தருளியுள்ளார். தோணியப்பர் வீற்றிருக்கும் ஸ்ரீ விமானத்தின் கிரீவத்தில் அமைந்துள்ள தெற்குக் கோட்டத்தில் சட்டநாதர் எழுந்தருளியுள்ளார். இவர் இருக்குமிடத்தை முன் புறம் வளர்த்திக் கட்டித் தனிச் சந்நிதியாக ஆக்கியுள்ளார். இதில் சட்டநாதர் பெரிய




வடிவுடன் சுதைச் சிற்பமாக விளங்கு கிறார்.மேனியில் புனுகு பூசப்பட்டுள்ளது. வலது கையில் சின்முத்திரை காட்டும் இவர் இடது கையைத் தண்டத்தின் மீது ஊன்றி யுள்ளார். இங்கு எழுந்தருளியிருக்கும் வைரவமூர்த்தியின் பெருமைகளைத் தல புராணம் விரிவாகக் கூறுகிறது.

இதில் திருமால் மகாபலிச் சச்சரவர்த் தியை நேரிடையாகச் சென்று வெல்ல முடி யாததால் வாமனனாக வந்து அவனை வஞ்சித்து உலகைக் கவர்ந்து கொண்டான். அவனைப் பாதாளத்திற்குத் தள்ளி அந்த வெற்றியால் அட்டகாசம் புரிந்தார் என்றும், சட்டநாதர் அவரை அடக்கியதுடன், அவரது தோலை உரித்து சட்டையாக அணிந்தார் என்றும், அவரது எலும்புகளைத் தண்ட மாகக் கொண்டார் என்றும் குறிக்கப்பட் டுள்ளது.

இவருடைய பெருமைகளைப் போற் றும் வகையில் இவருக்குஅனேக பெயர்கள் வழங்குகின்றன. அவற்றுள் முதன்மை பெற்ற எட்டுப் பெயர்களை வரிசைப் படுத்தி அஷ்ட நாமங்கள் என்று அழைக் கின்றனர். (பார்க்க பக்கம். 11)

இத்தலத்தில்ஆலயத்திற்குள் செல்லும் நாம் முதலில் பிரம்மபுரீசுவரரை வணங்கி, வலம் வந்து முதற் பிராகாரத்தில் வடக்குப் புறம்அமைந்துள்ள படிகளின் வழியாகக் கட்டுமலை மீதேறி உமா மகேசுவரரை (தோணியப்பரை) வணங்குகிறோம். அவரை வலம் வந்து அவருக்குத் தெற்கில் அமைக்கப்பட்டுள்ள படிகள் வழியாக



உமாமகேசுவரர் தோணியப்பர் விமானமும் - சட்டநாதர் சந்நிதியும் - சீர்காழி

மேலே சென்று விமானத்தில் இருக்கும் சட்டநாதரை அருகில் இருந்து தரிசிக்கலாம்.

இவருக்கு நேர் எதிரில் இவருக்குரிய பலிபீடம் முதற்பிராகார திருமாளிகைப் பத்தியில் இருக்கிறது. இவருக்குரிய அபிஷேக அலங்காரங்கள் அந்த பீடத்திற்கே செய்யப்படுகின்றன.


மேலும், மேற்குத் திருமாளிகைப் பத்தியில் ஒரு சட்டநாதர் இருக்கிறார். இவரைப் பிரத்யக்ஷ சட்டநாதர் என்கின்றனர். மலைமேல் ஏறிவந்து தன்னை தரிசிக்க முடியாதவர்க்குக் காட்சிதர இங்கே இருக்கிறார் என்கின்றனர்.

இதே பிராகாரத்தில் வடக்குத் திருமாளிகையில் தெற்குநோக்கி அமைந்துள்ள சந்நிதியில் தெற்கு நோக்கியவாறு உற்சவ சட்டநாதர் எழுந்தருளியுள்ளார். இவருக்கு முத்துச் சட்ட நாதர் என்பது பெயர். இவர் தலையை வட்டணையாக முடிந்துள்ளார். வலது கை சின்முத்திரை காட்ட, இடது கரத்தைத் தண்டத்தின் மீது ஊன்றியுள்ளார். தண்டத்தில் ஒரு பாம்பு சுற்றிக் கொண்டிருக்கிறது. இவருக்கு இருபுறமும் இரண்டு பூதர்கள் இருக்கின்றனர்.

முதற்பிராகாரத்திலுள்ள சட்டநாதர் பூஜா பலிபீடம் விமானத்திலுள்ள சட்டநாதர், மேற்குத் திருமாளிகை மண்டபத்திலுள்ள பிரத்யக்ஷய சட்டநாதர், வடக்குத் திருமாளிகை மண்டபத்திலுள்ள உற்சவ முத்துச் சட்டநாதர் ஆகியோரை வணங்கி வெளிப் பிராகாரத்திலுள்ள சட்டநாதரின் கொலு மண்டபத்தை அடையலாம்.

இந்த மண்டபத்திற்கு வலம்புரி மண்டபம் என்பது பெயராகும். இது ஒரு மீட்டர் உயரமுள்ள உபபீடத்தின் மீது அமைக்கப்பட்டுள்ளது. இதன் முன்புறம் மகா மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

வலம்புரி மண்டபத்தின் மையத்தில் கருவறை அமைந்துள்ளது. இந்த அறையின் நடுவில் பெரிய ஊஞ்சல் இருக்கிறது. அந்த ஊஞ்சலில் பெரிய நிலைக்கண்ணாடி வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கண்ணாடியில் ஸ்ரீவிமானத்தில் எழுந்தருளியிருக்கும் சட்டநாதமூர்த்தியின் திருவுருவம் தெரியும் படியாக அமைத்திருக்கின்றனர். கண்ணாடியில் தோன்றும் அந்த பிம்பத்தை வழிபட



சீர்காழியில் சட்டநாதர் சந்நிதியில் இருந்து காணும் போது முதலில் சிறியமண்டபமாக இருப்பது முதல் தளத்திலுள்ள சட்டநாதர் அபிஷேக பீடம் அமைந்திருக்கும் மண்டபம்.அதன் பின்புறம் மதிலிலுள்ள வாயில், அதையடுத்து இருப்பது வலம்புரி மண்டபம் . இது நுழைவாயிலின் மீது கோபுரத்தையும், கருவறை மீது விமானத்தையும் கொண்டுள்ளது. பின்னால் இருப்பது ஏழுநிலை தெற்குக் கோபுர வாசல்.

வேண்டும் என்பதே சரியான தாகும். இதற்குச் சாயாதரிசனம் என்பது பெயராகும்.

ஊஞ்சலுக்கு முன்புறம் முள் வைத்த பாதக் குறடுகள், தண்டங்கள், மயிற்பீலி புஞ்சங்கள் ஆகியவை வைக்கப்பட்டுள் ளன. இந்த அறையைச் சுற்றிச் சிறிய பிரகாரம் உள்ளது. இங்கு சுவரில் நான்கு பக்கங்களிலும் பக்கத்திற்கு இரண்டு வீதம் எட்டு மாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மாடங்களில் (சட்டநாதரின்) அஷ்ட சேனாதிபதிகளான அஷ்ட வடுக வைரவர்கள் எழுந்தருளியுள்ளனர். இவர்களின் பெயர்கள் 1.சுதந்திரர், 2. சுயேச்சையர் 3. லோகர் 4,காலர், 5. உக்ரர் 6. பிச்சையர் 7. நிர்மாணர் 8. பீஷ்ணர் என்பதாகும்.

இந்த வலம்புரி மண்டபம் வெள்ளிக்கிழமை இரவில் மட்டுமே திறக்கப்படுகிறது. வெள்ளிக்கிழமைகளில் நள்ளிரவில் சட்டநாதருக்குப் பூசைகள் முடிந்ததும், இந்த வலம்புரி மண்டபத்திற்கு வந்து பூசைகளைச் செய்கின்றனர்.

வெள்ளிக்கிழமைதோறும் முன்னிரவில் நிகழும் சட்டநாதர் வழிபாட்டிகுத் திரளான மக்கள் வந்து கலந்து கொள்கின்றனர். முதற்சுற்றில் இருக்கும் சட்டநாதர் அபிஷேக பீடத்திற்கு சிறப்பு அபிஷேகம் அலங்காரம் செய்யப்படுகிறது. பின்னர், அருச்சகர் ஸ்ரீ விமானத்தில்எழுந்தருளியிருக்கும் சட்டநாதருக்கு அருகில் சென்று தீபாராதனை செய்கின்றார்.

அதன்பிறகு வலம்புரி மண்டபத்தில் வழிபாடு நடத்தப்படுகிறது. இவர் இருக்குமிடத்திற்கு ஆண்கள் சட்டை அணிந்தோ மேலே போர்த்திக்கொண்டோ செல்வதில்லை. பெண்கள் தலையில் பூ வைத்துக் கொண்டு செல்வதில்லை. சீர்காழிச் சட்டநாதர் மீது தருமையாதீனத்தில் குரு மகாசந்நிதானமாக வீற்றிருந்த ஸ்ரீலஸ்ரீ தேசிகர் அவர்கள் ஆபதோத்தாரண மாலை என்னும் நூலைப் பாடியுள்ளார்.

உற்சவ சட்டநாதருக்குச் சித்திரை மாதம் நடைபெறும் பெருந்திருவிழாவிற் கும் பின்வரும் வெள்ளிக்கிழமையன்று விழா கொண்டாடப்படுகிறது. இவருக்குச் சிறப்பு அலங்காரங்கள் செய்யப்பட்டு வலம்புரி மண்டபத்திற்கு எழுந்தருளுகின் றார். அங்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. இரவு மீண்டும் தனது சந்நிதிக்குத் திரும்பிவிடுகிறார்.

சீர்காழி சட்டநாதர் செல்வம் அருளும் திவ்ய மூர்த்தியாக விளங்குகிறார்.

ஆணைக்காரன்



சட்டம் என்ற சொல்லைத் தமிழில் ஆணை என வழங்குகின்றனர். அதை யொட்டிச் சட்டநாதருக்கு ஆணைக்காரன் என்பது பெயராயிற்று. இதற்கு மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கான ஆணைகளைப் பிறப்பித்து அதன்படி அவர்களை நடக்கச் செய்பவன் என்பது பொருளாகும். தமது ஆணையை மீறி நடப்பவர்களை அவன் தண்டிக்கிறான். அவனது கையில் ஊன்றியுள்ள தண்டம் அவனது ஆணைகளை மீறி நடப்பவர்கள் கடுமையாகத் தண்டிப்பதற்கேயாகும். அவனது ஆணைக்குட்பட்டு நடக்கும் அன்பர்களுக்குத் துன்பம் விளைப்பவர்களை அவன் தண்டிப்பதும் அவனது செயலாகும்.

சீர்காழி சட்டநாதரின் அஷ்டநாமங்கள்

சிவவழிபாட்டில் எட்டு என்ற எண் சிறப்பான இடத்தைப்பெற்றுள்ளது. சிவபெருமானை அவரது எட்டுப் பெயர்களைக் கூறிப் போற்றுவது அஷ்டநாம அர்ச்சனை என்று அழைக்கப்படுகிறது. சிவபெருமானின் உக்ரகோலமான சட்டநாதருக்கு அவரது வீரதீரச் செயல்களை விளக்கும் வகையில் அனேக பெயர்கள் வழங்குகின்றன. அவற்றுள் சிறப்புமிக்க எட்டுப் பெயர்களைக் கூறி அவரைப் போற்றுகிறோம். சட்டநாதரின் எட்டு சிறப்புப் பெயர்களைச் சீர்காழித் தலபுராணம் 1.சட்டநாதன், 2.தண்டபாணி, 3. புழுகாளி, 4. ஆபதுத்தாரணன் 5. காலபைரவன் 6. அந்தரன், 7, ஆனந்தன். 8.மகாவைரவன் என்று பட்டியலிட்டுக் கூறுகிறது. இவற்றின் சிறப்புக்களைத் தொடர்ந்து காணலாம்.

1.சட்டைநாதன்

சட்டநாதன் என்பதைச் சட்டைநாதர் எனக் கொண்டு இந்த விளக்கம் அளிக்கப் பட்டுள்ளது. வாமனனாகச் சென்ற திருமால், மகா பலியிடம் மூன்றடி மண் கேட்டு யாசித்துப் பின்னர், ஈரடியால் மூவுலகையும் அளந்த பின்பு, அவரிடம் மூன்றாவது அடியை எங்கே வைப்பது என்று கேட்டார். அவன் தனது தலையைக் காட்டினான். திருமால் சற்றும் தாமதியாது அவன் தலை மீது காலை வைத்து ஊன்றி யதுடன், அழுத்தி ஊன்றி அவனைப் பாதாள உலகம் செல்லும் படிச் செய்தார். பிறகு அவனை வென்ற அகங்காரத்தால் ஆர்ப்பரித்து அட்டகாசம் புரிந்தார். அவரது செயலால் துன்புற்ற தேவர்கள் சிவபெருமானைச் சரணடைந்தனர். அவர் திருமாலை அழைக்க, அவர் வராததுடன் அவரை இகழ்ந்து பேசி ஆர்ப்பரித்தார்.

கோபம் கொண்ட சிவபெருமான் வைரவரைத் தோற்றுவித்துத் திருமாலை அடக்கி அழைத்து வரும்படி ஏவினார். அதன்படி, திருமால் இருக்குமிடத்திற்குச் சென்ற பைரவர் அவரைப் பிடித்து அவரது தோலை உரித்துச் சட்டையாக அணிந்தார்.



சட்டைநாதர்

மூவுலகையும் அளந்து நின்ற திருமாலின் தோல் அவரது முழங் கை முழங்கால் அளவே இருந்தது. அன்று முதல் அவர் சட்டைநாதர் என அழைக்கப்படுகிறார். மேலும், புனுகுச் சட்டத்தை விரும்பித் திருமேனியில் அணிவதாலும் இப்பெயர் பெற்றார். (விரிவான செய்திகளுக்கு பார்க்கம் பக்கம் 40)

2.தண்டபாணி

பகைவர்களின் எலும்புகளை இணைத்துக் கட்டி அதைத் தண்டமாகக் கையில் கொண்டிருப்பதால், வைரவர் தண்டபாணி எனப்படுகிறார்.

3.புழுகாளி

வடுகமூர்த்திக்குப் புனுகு நெய் பூசுவது வழக்கமாகும். புனுகுக் காப்பை விரும்பி அதன் வாசனையில் லயித்திருப்பதால், அவர் புழுகாளி எனப்படுகிறார். புழுக்கல் என்பது பொங்கல், சுண்டல் போன்ற அவித்த உணவுப் பொருட்களாகும். அவற்றை விரும்புவதால், இவர் புழுகாளி எனப் பட்டார் எனவும் கூறுகின்றனர்.

4.ஆபதோத் தாரணர்

அன்பர்களுக்கு ஆபத்துக்கள் நேரிடும் போது விரைந்து வந்து அந்த ஆபத்தை நீக்கி முன்போல் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதால் ஆபதோத்தாரணர் என்று அழைக்கப்படுகிறார்.

தருமை ஆதீனத்தில் பத்தாவது குரு மகா சந்நிதானமாக விளங்கிய சுவாமிகள் இவர் மீது ஆபதோத்தாரண மாலை என்னும் துதி நூலைப் பாடியுள்ளார்.

5.கால பைரவர்

காலங்களைக் கடந்து காலாதீதனாக விளங்குவதால் சட்டநாதர் கால பைரவர் என்று அழைக்கப்படுகிறார். காலனான எம தர்மனால் வரும் துன்பங்களை அழித்து இன்பமளிப்பதாலும் அவர் காலபைரவர் எனப்படுகிறான்.

6.அந்தரன்

அந்தரம் என்பது ஆகாசப் பெருவெளியைக் குறிக்கிறது. ஆகாச வெளியாகவும் அதில் வீற்றிருப்பவனாகவும் இருப்பதால், சட்டநாதர் வடுகன் அந்தரன் என்றும், ஆகாசபைரவன் என்றும் அழைக்கப்படுகிறார். அந்தரம் என்பதற்கு மறைவானது என்பதும் பொருள். எல்லோருடைய உள்ளத்திலும் மறைந்திருப்பதாலும் இப்பெயர் பெற்றான் என்பர்.

7.ஆனந்தன்

ஆனந்தம் என்பது மகிழ்ச்சியைக் குறிப்பதுடன்,அழிவின்றி வளர்வதையும் குறிக்கிறது. அன்பர்களுக்கு மகிழ்ச்சியைத் தருபவனாகவும், அழிவின்றி ஓயாது வளர்பவனாகவும் இருப்பதால் வடுக மூர்த்தி ஆனந்தன் எனப்படுகிறான்.

8.மகாபைரவன்

பைரவம் என்ற சொல் பகைவர் களுக்கு அச்சத்தை அளித்து நமக்கு காவ லைத் தரும் செயலைக் குறிக்கிறது. உயிர் களுக்குப் பெருங்காவலாக இருந்து மகிழ்ச்சியில் திளைக்கச் செய்வதால் வடுக மூர்த்தி மகாபைரவன் எனப்படுகிறான்.

இந்த எட்டுப் பெயர்களையும் கூறி வடுகரை வழிபடுவதால் நமக்குச் சகல செல்வங்களையும் தந்து பாதுகாப்பையும் வழங்கி மேலான வாழ்வைத் தரும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.


தலைஞாயிறு என வழங்கும் கருப்பறியலூர் ஆலயத்துச் சட்டநாதர்

சோழநாட்டுத் திருத்தலங்களில் ஒன்று கருப்பறியலூர். இது வைத்தீசுவரன் கோயிலில் இருந்து ஏறத்தாழ 10 கி.மீ தொலைவில் உள்ளது. இந்நாளில் மக்கள் இதனைத் தலைஞாயிறு என்று வழங்கு கின்றனர். தேவாரம் இதனைக் கொகுடிக் கோயில் என்று போற்றுகிறது. ஞாயிறு காணி எனவும் வழங்குவர். திருஞான சம்பந்தரும், சுந்தரரும் பாடிப் பரவிய பதி.


இங்கு கருவறையில் எழுந்தருளி யிருக்கும் சிவலிங்கமூர்த்திக்குக் குற்றம் பொறுத்தருளிய நாதர் (அபராத ரக்ஷகர்) என்பதுபெயர். அம்பிகை விசித்ரபாலா என்று அழைக்கப்படுகிறாள்.

இங்கு கருவறையின் பின்புறம் மாடக் கோயில் போல் அமைந்த கட்டுமலை மீதான கோயிலில் உமாமகேசுவரர் எழுந் தருளியுள்ளார். அவருக்கு மேலேயுள்ள விமானத்தில் சட்டநாதர் எழுந்தருளி யுள்ளார். இவரைச் சென்று தரிசிக்கக் குறுகலான மரப்படிகள் அமைக்கப்பட் டுள்ளன.

இத்தலத்தில் சீர்காழியைப் போலவே சிவலிங்கம், உமாமகேசுவரர், சட்டநாதர்




இடப்புறம் இருப்பது குற்றம் பொறுத்தருளிய நாதர் கருவறை வலப்புறம் இருப்பது கட்டுமலை. அதன்மீது உமாமகேசுவரர் சந்நிதியும், அதன்மீது இருப்பது சட்டநாதர் சந்நிதியுமாகும்.



ஆகிய மூவரும் சிறப்புடன் எழுந்தருளி யிருப்பதால் இதனை மேலைக்காழி எனவும் வழங்குகின்றனர். இங்கே கருப் பறியலூர் ஆலய விமானத்தையும் அதில் வீற்றிருக்கும் சட்டநாதசுவாமியையும் தரிசித்து மகிழலாம்.

சட்டநாதர் - தலைஞாயிறு (கருப்பறி யலூர்) இவருடன் பூதகணங்கள் இல்லை. பிரபையில் இரண்டு கந்தர்வர்கள் அமைக்கப் பட்டுள்ளனர்.



அஷ்ட வடுக பைரவர்கள்

மாமன்னர்களும், பெரும்பதவியில் இருப்பவர்களும் எட்டுத் திசைகளிலும் தங்கள் அதிகாரம் என்றும் நிலைத்திருக்க உரிய தகுதி படைத்த வீரர்களைப் பதவியில் அமர்த்தி அவர்களுக்கு வேண்டிய அதிகாரங்களை வழங்குகின்றனர். சிவபெருமான் மாமன்னனாக இருக்கும் போது எட்டுத் திசைகளிலும் இந்திரன் முதலான திக்பாலகர்களை வீற்றி ருக்கும்படிச் செய்துள்ளார். அவர் பைரவராகக் கோலம் கொள்ளும் போது அஷ்ட பைரவர் களைச் சேனாதிபதிகளாகக் கொண்டிருக்கின்றார். அஷ்டபைரவர்கள் என்பவர்கள் 1. அஜிதாங்கர், 2.ருரு பைரவர், 3. சண்டபைரவர் 4.குரோத பைரவர், 5.உன்மத்த பைரவர், 6.கபால பைரவர் 7.பீஷ்ணர், 8. சண்டபைரவர் (சம்ஹார பைரவர்) என்போர்களாவர்




சிவபெருமான் ஆகாச அந்தர வடுக மூர்த்தியாக இருக்கும்போது அவரது அஷ்ட சேனாதிபதிகளாக இருப்பவர்கள், 1. சுதந்திரர், 2. சுயேச்சையர் 3. லோகர் 4, காலர், 5. உக்ரர் 6. பிச்சையர் 7. நிர்மாணர் 8. பீஷ்ணர் என்போர்களாவர். இவர்களை அஷ்ட வடுக பைரவர்கள் என்றும் அழைக்கின்றனர். சீர்காழி ஆலயத்தில் தெற்குப் பிராகாரத் தில் அமைந் துள்ள வலம்புரி மண்டபத்தில் இந்த அஷ்ட வடுக பைரவர்களும் எழுந்தருளியுள்ளனர். இங்கு மண்டபத்தின் நடுவில், பெரிய ஊஞ்சல் அமைந்துள்ளது. இதைச் சுற்றி அமைந்துள்ள மண்டபச் சுவர்களில் அமைந்த மாடங்களில் இவர்கள் எழுந்த ருளியுள்ளனர். பைரவரின் பலிபீடத்தின் எட்டுத் திக்கிலும் இவர்கள் பூசிக்கப்படுகின்றனர்.

நாகப்பட்டினத்துச் சட்டநாதர்

சோழநாட்டுக் கடலோரத் தலமாக இருப்பது நாகைப்பட்டினம். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான அதிபத்த நாயனார் வாழ்ந்து இறைவனுக் குப் பொன்மீன் அளித்து வீடுபேறு பெற்ற தலம்.

இத்தலத்தில் அருள்மிகு நீலாயதாக்ஷி என்னும் நீலநெடுமலர்க்கண்ணி உடனாய காயாரோகண சுவாமி திருக்கோயில் உள்ளது. இக்கோயில் சப்தவிடங்கத் தலங் களில் ஒன்றாகும். இங்குள்ள வீதிவிடங்கப் பெருமானின் பெயர் சுந்தரவிடங்கன் என்பதாகும்.வர லாற் றுச் சிறப்பும் புராணச் சிறப்புமி மிக்க கோயிலாக காயாரோகண சுவாமி கோயில் இருந்து வருகிறது.



ஸ்ரீ சட்டநாதர் - அமுதாம்பிகை - நாகப்பட்டினம்

நாகைப்பட்டினத்தில் பன்னிரண்டு பெரும் சிவாலயங்கள் இருக்கிறதென்று தலபுராணம் கூறுகிறது. இவற்றுள் முதன்மை பெற்றதாகக் காயாரோகணசுவாமி கோயில் இருக்கிறது. இக்கோயில் இங்கு உருவாவதற்கு முன்பாகவே தோன்றிய கோயில், இக்கோயிலுக்கு மேற்கில் அமைந்த ஆதிகாயாரோகணேசுவரர் கோயிலாகும். இதனைத் தலபுராணம் மேலைக் காரோணம் என்று போற்றுகின்றது.

இதில்பெரிய அழகிய சிவலிங்கமாக ஆதி காயாரோகணர் எழுந்தருளியுள்ளார்.

இங்குள்ள அம்பிகையின் பெயர் கடும்படு சொல்லி என்பதாகும். இதனை வடமொழியில் இட்சுரசசுபாஷிணி என்று அழைக்கின்றனர்.

மேலும், இக்கோயிலில் கருவறை யின் தெற்குக் கோட்டத்து தட்சிணா மூர்த்திக்குப் பெரிய தனி ஆலயம் அமைக் கப்பட்டுள்ளது. தட்சிணாமூர்த்திக்கு அழகிய உலாத் திருமேனியும் உள்ளது. சங்கர ஜெயந்தியன்று இந்த உலாத்திருமேனிக்குச் சிறப்பு அபிஷேக அலங்காரங்கள் செய்யப்பட்டு வீதியுலாவும் நடத்தப்படுகிறது.

மேலைக் காயாரோகணேசுவரர் ஆலயம் விசாலமாகவும், கலைச் சிறப்போடும் திகழ்கிறது. இந்த ஆலயத்தின் தெற்குப் பிராகாரத்தில் தெற்கு நோக்கியவாறு மாடக் கோயிலாகச் சட்டநாதர் ஆலயம் அமைந்துள்ளது.


மேலைக் காயாரோகண சுவாமி கோயிலின் அங்கமாக சட்டநாதர் கோயில் இருந்தாலும், அக்கோயிலுக்கான தனித்தலைவாயில் தெற்கு நோக்கியுள்ளது. அந்த வாயிலின் மீது மூன்று நிலை கோபுரம் அணி செய்கிறது. கோபுரத்திற்குக் கிழக் கில் பெரிய துணைவாயில் அமைக்கப்பட்டுள்ளது. இது அக்னி திசைப்பெரு வாயிலாகும். கோபுரவாயிலின் வழியாக உள்ளே சென்றதும் நீண்ட அழகிய மண்டபத்தைக் காண்கிறோம். இது கோபுரத்தையும் மகா மண்டபத்தையும் இணைக்கிறது. இதில் வடபுறம் கொடிமரம் உள்ளது. இதனை வணங்கி, பக்கவாட்டிலுள்ள படிகளின் மீது ஏறி மாடக் கோயிலின் மீதுள்ள முக மண்டபத்தை அடைகிறோம்.

சட்டநாதர் கோயில் முகமண்டபம், மகாமண்டபம், அர்த்தமண்டபம் கருவறை என்று விசாலமான அங்கங்களை உடையதாக இருக்கிறது. முகமண்டபத்தில் கருவறைக்கு நேர்எதிரில் சட்டநாதரின் சிங்க வாகனம் அமைந்துள்ளது. இம்மண் டபத்தின் விதானத்தில் சட்டநாதரின் பெரிய ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. இதன் நடுவில் சட்டநாதரும் இடதுபக்கம் அமு தாம்பிகையும் வலப்புறம் ராமதேவர், சோளீசு வரமுடையார் திருவுருவங்களும் தீட்டப் பட்டுள்ளன. மண்டபச் சுவரில் 18 கரங்களுடன் திகழும் நடன காளியின் திரு வுருவம் தீட்டப்பட்டுள்ளது. இந்த ஓவியங் களைக் கண்டுகளித்து மகாமண்டபத்தை அடையலாம்.

மகாமண்டபத்தில் வடமேற்குப் பகுதியில் ஒரு பாதுகாப்பு அறை தடுக்கப்பட்டு,அதில் ஆலயத்தின் உலாத் திருமேனி எழுந்தருளி வைக்கப்பட்டுள்ளனர். விநாயகர், வள்ளி தெய்வயானை உடனாய முருகன் சட்டநாத சந்திரசேகர சுவாமி அவரது தேவி, கல்யாணசுந்தரர் வடுக சண்டேசுவரர், சோமாஸ்கந்தர், நடராசர், சிவகாமி, நால்வர் தட்சிணாமூர்த்தி முதலான மூர்த்தங்கள் எழுந்தருளி வைக்கப்பட்டுள்ளனர்.

உலா மூர்த்திகளை வணங்கியபின் தரிசன மண்டபத்தை அடையலாம். இந்த அர்த்த மண்டபத்தை அடுத்து அர்த்தார்த்த மண்டபம் இருக்கிறது. இந்த மண்டபத் தில் பைரவரின் அபிஷேகத் தானமான பலிபீடம் இருக்கிறது. தினப்பூசைகளில் அபிஷேக அலங்காரங்கள் இந்த பலிபீடத் திற்கே நடத்தப்படுகின்றன. பலிபீடம் இருக்கு மிடத்திற்குப் பின்புறம் அமைந் துள்ள கருவறையில் மேடை அமைக்கப்பட்டு, அதன்மீது வைக்கப்பட்டுள்ள வெள்ளி மஞ்சத்தில் ஆனந்த பைரவ சட்டநாதர் கோலாகலமாக எழுந்தருளி யுள்ளார். இவர் பத்து திருக்கரங்களுடன் திகழ்கிறார். வலது முன்கை அபயம் காட்ட இடது கரத்தைத் தண்டத்தின் மீது ஊன்றியுள்ளார். பின் எட்டுக் கரங்களில் சூலம், டமருகம், வாள், அங்குசம், கபாலம், பாம்பு,கேடயம், பாசம் ஆகிய எட்டு ஆயுதங்களையும் தாங்கி யுள்ளார். இதனை இவர் மீது பாடப் பட்டுள்ள சட்டநாதப் பதிகத்தின் நான்கா வது பாடலின் மூலம் அறிகிறோம்.

இவர், ஏறத்தாழ ஒரு அடி உயரத்திற் குச் சற்று கூடுதலான உயரமுடையவர் . இவருடன்இவரது தேவியின் திருவுருவம் உள்ளது. அமுதவல்லி எனப்படும் அந்த பைரவி இரண்டு கரங்களுடன் திகழ்கின் றாள். இருவருக்கும் தங்கக் கவசம் அணி விக்கப்பட்டுள்ளது. இவர் அதியற்புத சக்தி வாய்ந்த பைரவராக அன்பர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார்.



நாகப்பட்டினம்-சட்டநாதர் மாடக்கோயில் -இடதுபுறம் சூல தீர்த்தம்.

இனி இவர் இங்கு எழுந்தருளிய வரலாற்றைக் காண்போம்.

சித்தர்கள் மரபில் வந்தவர் இராம தேவர். அளப்பறிய சித்திகள் கைவரப் பெற்றிருந்த இவர், காசி மாநகரம் சென்றார். அங்கு தினமும் கங்கையில் நீராடி காசி விசுவநாதரையும், அன்னபூரணியையும் கால பைரவரையும் வழிபட்டு வந்தார்.

அந்நாளில் காசி விசுவநாதரின் வீரதீரங் களையும் அருள்புரியும் தன்மைகளையும் கூறும் புராணங்களைப் படித்தும், கேட் டும் வந்தார். அவருக்கு விசுவநாதர் ஒரு நாள் பத்துக் கரங்களுடன் மகாபைரவ மூர்த்தியாகக் காட்சி அளித்தார். அதைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்த ராமதேவர் அல்லும் பகலும் அந்தமூர்த்தியைத் தியா னித்து வந்தார். அவருக்குத் தாம் தியானித்து மானசீகமாக வழிபட்டு வரும் பைரவ மூர்த்தியின் . வடிவத்தை உருவமாக அமைத்து வழிபட வேண்டுமென்ற விருப்பம் உண்டாயிற்று. அவ்விருப்பத் தினை நிறைவேற்றுமாறு காசி விசுவநாத ரையும், கால பைரவரையும் பிரார்த்தித்து வந்தார்.

இப்படியிருக்கும் நாளில் அவர் கங்கையில் நீராடும் போது ஒரு மூங்கில் பெட்டி ஒன்று அவர் மீது வந்து மோதியது. அவர் அதைத் தள்ளிவிட்டு நீராடிக் கரை யேறி வந்து ஜெபத்தில் ஈடுபட்டார். வழக்கம் போல் விசுவநாதர் விசாலாட்சி அன்ன பூரணி கால பைரவர் தரிசனத்தைத் தொடர்ந்து வந்தார். கங்கையில் மூழ்கும் போது அவர்மீது மூங்கில்வெட்டி மோது வதும் அவர் அதைத் தள்ளிவிட்டு நீராடிக் கரையேறித் தமது பக்திப் பணிகளைச் செய்வதுமாக ஏழு நாட்கள் கடந்தன. ஏழாம் நாள் இரவு அவர் கனவில் விசுவ நாதர் தோன்றி, அவர் விரும்பியபடியே தாம் பைரவர் உருவத்தைக் கங்கையில் பெட் டியில் வைத்து அனுப்பியதாகவும், அதை அவர் நிராகரித்து விட்டதையும் கூறினார்.

கண்விழித்த இராமதேவர் மனம் வருந்தினார். அதிகாலையிலே கங்கைக்குச் சென்று அதில் மூழ்கி கங்கையிடம் பைரவரைத் தந்தருளுமாறு பிரார்த்தித்தார். கங்கையின் அருளால் அங்கே பெட்டி தோன்றி மிதந்து வந்தது. இராமதேவர் இரு கரம் நீட்டி அப்பெட்டியை எடுத்துக் கொண்டார். கரையில் வைத்துப் பெட்டி யைத் திறந்து பார்த்தபோது அதில் ஜ்வலிக் கும் சுவர்ண மூர்த்தியாக தசகர சட்டநாதர் திருமேனியைக் கண்டார். அவருள்ளத்தில் ஆனந்தம் பொங்கிப் பெருகியது. அந்த உருவத்தை கங்கை நீரால் அபிஷேகித்து பூஜை செய்து வணங்கினார்.

பின்னர், கால பைரவர் சந்நிதி அருகில் ஓரிடத்தில் அவரை எழுந்தருளி வைத்துச் சிறப்பாகப் பூசித்து வந்தார். காலங்கள் இனிதே கழிந்தன.

சோழநாட்டிலிருந்து சோளேச்சுவர முடையார் என்பவர் காசிக்குச் சென்றார். அங்கு சில நாட்கள் கோயில் கோயிலாகச் சென்று சுற்றித் திரிந்து வழிபட்டு வந்தார். அப்படி இருக்கும் ஒரு நாளில் அவர் சித்தர் ராமதேவரைச் சந்தித்து அவருக்குச் சீடரா னார். இராமதேவர் தனக்குத் தெரிந்த அத்த னை சித்துக்களையும், மந்திர, தந்திரங்க ளையும் அவருக்கு உபதேசித்தார். ஒரு நல்ல நாளில் சட்டநாத மூர்த்தியை அவரிடம் அளித்துஅவருக்குத் தொடர்ந்து பூசைகள் செய்து வரும்படிக் கூறிவிட்டு தனது ஆன்மிகப் பயணத்தைத் தொடர்ந்தார்.

இராமதேவரின் ஆணைப்படி சோளீசுவரமுடையார் சட்டநாத பைரவரைக் காசியில் பூசித்து வந்தார். ஒருநாள் அவர் கனவில் சட்டநாதர்தோன்றி, "அன்பனே நாம் தென் தமிழ்நாட்டில் வீற்றிருந்து அருள்பாலிக்க விரும்புகிறோம். நாளையே நம்மை எடுத்துக் கொண்டு தென்திசைக்குப் பயணிப்பாய். நாம் விரும்பும் இடத்தை உமக்கு அறிவிப்போம். அங்கு நாம் நிலையாகத் தங்கி அருள்பாலிப்போம்" என்றார். துயில் நீங்கி எழுந்த சோளீச்சுவரமுடையார் சட்டநாதரின் ஆணையால் பெரிதும் மனம் மகிழ்ந்தார்.

அவரது ஆணைப்படியே சோளீச்சுவர முடையார் அதிகாலையிலேயே எழுந்து கங்கையில் நீராடி கங்கைக் கரையில் சட்டநாதருக்குப் பூசைகளைச் செய்தபின் அவரைப் பெட்டியில் எழுந்தருளி வைத்து தலை மீது சுமந்து கொண்டுதென்திசையை நோக்கிப் பயணமானார். நாட்கள் பல கடந்தன.

பைரவ சட்டநாதரைத் தலைமீதும் அவரிடம் கொண்ட பக்தியை நெஞ்சியிலும் சுமந்தவாறு காடுகள், மலைகள், ஆறுகள் பலவற்றைக் கடந்துசோளீச்சுவர முடையார் நாகப்பட்டினத்தை அடைந்தார். அங்கு பைரவர் அவரிடம் தம்மை அங்கேயே நிலைநிறுத்தும்படி ஆணை தந்தார்.

அவரதுஆணைப்படியே சோளீச்சுவர முடை யார், நாகப்பட்டினத்திலுள்ள ஆதி கோயிலான மேலைக் காயாரோகண சுவாமி ஆலய மண்டபத்தில் அவரை எழுந்தருளி வைத்து சிறப்புப் பூசைகள் செய்து வந்தார்.

பின்னர் எளிய முறையில் மேடை அமைத்து அதன்மீது சிறு சந்நிதி அமைத்து அதில் சட்டநாதரை எழுந்தருளி வைத்து வழிபட்டுவந்தார். அவர் உள்ளத்தில் சட்டநாதருக்குப் பெரிய ஆலயமும்



சட்டநாத சந்திரசேகரர் -அமுதவல்லி

சிறப்பான திருவிழாக்களும் நடத்தப்பட வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. அதை நிறைவேற்றும்படி பைரவரிடம் பிரார்த்தித்தார்.

பைரவ சட்டநாதர் அவரிடம் "அன்பனே, உமது எண்ணப்படியே எல்லாம் நடக்கும். இத்தலத்திற்கு வடக்கே திருமலைராயன் பட்டினம் என்னும் பெரிய பட்டினம் உள்ளது. அந்நகரை ஆளும் மன்னனின் மகளை ஒரு கொடிய பிரம்ம ராட்சதன் பிடித்து வருத்திக் கொண்டிருக்கிறான். நீ சென்று நமது விபூதியை அவளுக்கு இட்டு அவள் மீது தீர்த்தத்தைத் தெளி. பிரம்மராட்சசன் விலகுவான். அவன் அடுத்தவர்களைப் பற்றி வருத்தா மல் இருக்க அவனை விலங்கிட்டு இங்கே அழைத்து வருக" என்று ஆணை கொடுத்து அனுப்பினார்.

சோளீசுவரமுடையார் பைரவரின் விபூதியையும் தீர்த்தக் கெண்டியையும் பொற்பிரம்பையும் எடுத்துக் கொண்டு திருமலைராயன்பட்டினத்தை நோக்கிச் சென்றார்.

அவரது வரவை அறிந்த மன்னன் மகிழ்ந்தான்.தனது ஒரே செல்வமகள் பிரம்ம ராட்சதனின் பிடியில் சிக்கிக் கொண்டு வாடி வதங்குவதைக் கண்டு அவன் பெருந்துன்பம் அடைந்திருந்தான். சோளீச்சுவர முடையாரின் பெருமைகளை அறிந்திருந்த அவன் தனது துன்பத்தைத் தீர்த்து வைப்பவர் என உறுதியாக நம்பி னான். அவரை உரிய முறையில் வரவேற்று அமரச் செய்தான்.

சோளீச்சுவரமுடையார் முன்பாகத் தனது திருமகளைக் கொண்டு வந்து விடுத்தான். சோளீச்சுவரமுடையார் சட்டநாத பைரவரை மனதில் வணங்கி அவரது விபூதியை எடுத்து அப்பெண்ணின் மேல் இட்டார். மந்திர அபிஷேகத் தீர்த்தத்தைத் தெளித்தார். பிரம்பால் அவளைத் தொட்டார். விபூதியை இட்ட போது அடங்கிய பிரம்மராட்சதன் தீர்த்தம் பட்டதும் வெளியே வந்தான். பொற்பிரம்பு பட்டதும் மந்திர விலங்கால் கட்டுண்டு நின்றான்.

தன்னைப் பற்றியிருந்த பிரம்மராட்ச தன் விலகியதால், மன்னன் மகள் இயல் பான நிலையை அடைந்தாள். அழுதல், அட்டகாசமாகச் சிரித்தல் போன்ற சேட் டைகள் அவளிடமிருந்து விலகின.

அவள் அடக்கமும் பண்பும் உடைய வளானாள். அவள் சோளீச்சுவரமுடையா ரைப் பணிந்து போற்றினாள். சோளீச்சுவரர் மன்னனுக்கும் மற்றும் உள்ளோர்க்கும் சட்டநாதரின் பெருமைகளை எடுத்து விளக் கினார். அவற்றைக் கேட்ட மன்னர் சட்டநாதரைக் காணும் ஆவலில் நாகைக் கு உடனே புறப்படத் தயாரானான்.

ஒரு நல்ல நாளில் வருமாறு அவ னுக்கு ஆணை தந்த சோளீச்சுவரமுடையார் அவனி டம் விடை பெற்றுக் கொண்டு நாகப்பட் டினத்திற்குத் திரும்பினார். அங்கு கோயி லுக்கு நேர் எதிரில் தாம் தங்கி இருக்கும் இடத்திற்கு அருகில் பிரம்மராட்சதனை அகலாதிருக்கும்படிச் செய்தார். (அந்த இடம் இப்போது சித்தாந்துறைப் பிள்ளை யார் கோயிலாக இருக்கிறது.

ஒரு நல்ல நாளில் திருமலைராயன் பட்டினத்து அரசன் தன் குடும்பத்தோடு பூசைக்குத் தேவையான பொருட்களுடன் சட்டநாதர் ஆலயத்திற்கு வந்தான்.

சோளீச்சுவரமுடையார்அவனை அழைத்துச் சென்று பைரவருக்கு அபிஷேக அலங்காரம் செய்து சிறப்பான பூசைகளைச் செய்து வைத்தார். பின்னர், அவனிடம் சட்டநாதரின் கோயிலை நிர்மாணித்துத் திருவிழாக்களை நடத்த வேண்டும் என்ற தமது விருப்பத்தைக் கூறினார்.

அரசன் தரமான கருங்கற்களைக் கொண்டு பெரிய,நேர்த்தியான மாடக் கோயிலாகச் சட்ட நாதர் கோயிலை அமைத் தான். விழாவில் பவனி வர, அழகிய உலாத் திருமேனிகளையும் செய்துவைத்தான். அவன் செய்துவைத்த மூர்த்தங்களில் சட்ட நாத சந்திரசேகர மூர்த்தம் தனித்தன்மை மிக்கதாகும்.


சட்டநாதருக்கு ஆகமப்படியான பூசைகள் நடைபெற பூசகர்களை நியமித்த துடன் அவற்றிற்கு அரசன் தினப் பூசை களை நடத்த வேண்டிய அளவுக்குப் பொருட்களையும் ஏற்பாடு செய்து அளித்தான். சித்திரை மாதம் பௌர்ணமி யைக் கடைநாளாகக் கொண்டு பெருந்

திருவிழா நடத்த ஏற்பாடு செய்தான். அத்துடன் மாத, வார, ஆண்டு விழாக்களையும் நடத்த ஏற்பாடு செய்தான்.

சோளீச்சுரமுடையார் பல ஆண்டுகள் இனிதே வாழ்ந்து சட்டநாரைப் பூசித்துக் கொண்டும் தமது சித்துக்களினால் அன்பர்களுக்கு நலம் புரிந்து கொண்டிருந்தார். இறுதியில் கோயிலுக்கு நேர் எதிரில் ஒரு பீடம் அமைத்து அதில் சமாதியானார். அந்த பலிபீடத்தை அன்பர்கள் சிறப்புடன் வழிபட்டு வருகின்றனர்.

இப்போது நான்கு கால நாட்பூசைகளுடன் சிறப்பாகக் கோயில் இயங்கி வருகிறது. சித்திரை மாதம் சித்திரா பௌர்ணமியைக் கடை நாளாகக் கொண்டு பெருந் திருவிழா கொண்டாடப்படுகிறது. விழாவிற்கு முன்னதாக விநாயகர் விழா கொண்டாடப்படுகிறது. சிங்க உருவம் பொறித்த கொடியேற்றத்துடன் விழா தொடங்குகிறது. தினமும் காலையிலும் மாலையிலும் சட்டநாத சந்திரசேகரர், விநாயகர், முருகன், வடுக சண்டேசுவரர் ஆகியோர் வீதிகளில் எழுந்தருள்கின்றனர். இரவு விழாக்களில் சட்டநாத சந்திரசேகரர், குதிரை, சிங்கம், மயில், யானை, ரிஷபம் முதலிய வாகனங்களில் பவனி வருகிறார்.

ஐந்தாம் நாளில் நடைபெறும் வசந்த விழாவிற்கும், ஒன்பதாம் நாள் நடை பெறும் தேர்த் திருவிழாவிற்கும் மட்டும் மூலவராக விளங்கும் சட்டநாதரே எழுந் தருளுகின்றார். இப்படிச் சட்டநாதர் தேவி யுடன் தேரில் வந்துஅன்பர்களுக்குக் காட்சியளிப்பது காணற்கரிய காட்சியாக இருக்கிறது. பத்தாம் நாள் காலையில் நடராஜர் எழுந்தருளித் தீர்த்தம் அளிக்கிறார். விழா நிறைவில் திருக்கல்யாண உற்சவம் கொண்டாடப்படுகிறது. சட்டநாதர் திரு



மணம் காணும் விழாவும் வேறெந்த தலத்திலும் காண முடியாத காட்சியாகும்.

காசியில் இருந்து வந்தபோது சட்டநாதர் தனி நாயகமூர்த்தியாகத் தான் இருந்தார். இவர் சந்நிதியில் பேய் பிசாசு கள் பிரம்மராட்சதர்கள் போன்ற தீய சக்தி களால் பீடிக்கப்பட்டவர்கள் வருவார்கள். அப்போது அவர்களை அடக்கி ஓட்ட சட்டநாதர் உக்ரமடைவார். அவர் உக்கிரம் சில சமயம் நாட்கணக்கில் குறையாதிருந்தது. அதனால் நித்திய வழிபாடு செய்வது பூஜை செய்வது போன்றவை தடைப்பட்டன. அதனால் நாகநாத சிவாச்சார்யார் என்பவர் அவருடன் அம்பிகையை எழுந்தருளி வைத்து சட்டநாதர் எப்போதும் சாந்தமாக இருந்து அருள்புரியும்படிச் செய்தார். அன்று முதல் சட்டநாதர் அமுதவல்லி யோடு காட்சி தந்து கொண்டிருக்கிறார்.

அமுதவல்லியும் ஆனந்த சட்டநாத பைரவரும்அன்பர்கள் யாவருக்கும் சகல செல்வங்களையும் தந்து அருள்பாலிக்கப் பிரார்த்திக்கிறோம்.

இந்தச் சட்டநாதர்பேரில் திருமலைக் குமாரசாமிக் கவிராயர் என்பவர் சட்டநாதப் பதிகம் என்ற நூலைப் பாடியுள்ளார். இதில் சட்டநாதர் வடிவழகு, அவர் ஏந்தியுள்ள ஆயுதங்கள், அவரது பெருமைகள் ஆகியவை விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

திருமலை ராயன் பட்டினம் சட்டநாதர்

கிழக்குக் கடலோரத்தில் காரைக்காலுக்கும் நாகப்பட்டினத்திற்கும் இடையே அமைந்திருக்கும் ஊர் திருமலைராயன் பட்டினம். கவிகாளமேகம்இந்நகரை ஆண்ட திருமலைராயனால் ஆதரிக்கப் பட்டவர். இங்கு ஊருக்குக் கிழக்கில் சடாயுபுரீசுவரர் ஆலயம் என்னும் பெரிய சிவாலயம் அமைந்துள்ளது. இவ்வாலயத்தில் மூலவராக எழுந்தருளியிருப்பவர் பறவை அரசன் ஜடாயுவால் வழிபடப் பட்ட சிவலிங்க மூர்த்தியாவார். அவன் பெயராலேயே அவர் ஜடாயுபுரீசுவரர் என்று அழைக்கப்படுகிறார்.

இக்கோயிலின் இராஜகோபுரத்தின் தென் பகுதியில் உயரமான மண்டபம் கட்டப்பட்டு, அதன்மீது கோபுரத்தை ஒட்டியவாறு சட்டநாதருக்கான சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள சட்ட நாதர் வடிவம் அழகியதாகும். இவரைச் சுற்றி அகன்ற வேலைப்பாடுள்ள பிரபை அமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய பிரபையை வேறு சட்டநாதர் வடிவங்களில் காண முடியவில்லை.

இந்தச் சட்டநாதர் சந்நிதி நாகப் பட்டினத்தில் கோயில் கொண்டிருக்கும் சட்டநாதர் கோயிலின் வரலாறோடு தொடர் புடையதாகும்.

அது சுருக்கமாக ....

இப்பகுதியை ஆண்டு வந்த மன்னனின் மகளை பிரம்மராட்சதன் பிடித்துத் துன்புறுத்தினான். நாகப்பட்டினத்துச் சட்டநாதர் அருள் பெற்ற சோழீசுவர முடையார் என்னும் பக்தர் அந்த பிரம்ம ராட்சதனை அடக்கி அவன் உடலில் இருந்து வெளியேற்றி விலங்கிட்டுச் சட்ட நாதருக்கு அடிமைப்படுத்தினார்.

தன் மகள் பிரம்மராட்சதன் பிடியில் இருந்து தப்பித்து குணமானதற்குக் காணிக் கையாகத் திருமலைராயன் பட்டினத்து அரசன் நாகைப் பட்டினத்தில் மேலைக் காயாரோகணர் ஆலயத்திற்குள் சட்டநாதருக்குப் பெரிய ஆலயம் அமைத்துக் கொடுத்தான். அங்கு பூசைகள் நடத்த அந்தணர்களைக் குடியேற்றி அதற்கு வேண்டும் நிபந்தனைகளை அளித்தான். மிகுந்த பகுதியினால் அங்குள்ள சட்ட நாதருக்குப் பரமபக்தனாகி விட்டான்.

அவன் தினமும் திருமலைராயன் பட்டினத்திலிருந்து நாகப்பட்டினத்திற்கு வந்து வழிபடுவது வழக்கம். காலச் சூழலாலும், அரசுப் பணியாலும் அடிக்கடி வழிபட முடியாமல் போகும் என்று எண்ணி வருந்தினான். அவனது வருத்தத் தைத் தீர்க்க விரும்பிய சட்டநாதர் தனது ஓர் அம்சத்தினைச் சடாயுபுரீசுவரர் ஆலயத்து ராஜகோபுரத்தின் தெற்கு முகத்தில் நிலைப் படுத்தி அதனை வழிபட்டு வருக எப்போதும் நான் இங்கேயே இருக்கிறேன் என்று வாக்குக் கொடுத்தார்.

மன்னனும் மகிழ்ந்து கோபுரத்தை ஒட்டிப் பெரிய மண்டபம் அமைத்து, அதன்மீது சட்டநாதருக்கு ஆலயம் அமைத்துச் சிறப்பு வழிபாடுகள் செய்து வழிபட்டு வந்தான்.

சட்டநாதருக்கு அழகிய உலாத் திரு மேனிகள் செய்து வைத்ததுடன் சிறப்பான விழாக்களையும் நடத்தி மகிழ்ந்தான். இப்போது இந்த வடிவம் ஆலய உலாத்திரு மேனிகள் வரிசையில் வைக்கப்பட் டுள்ளன.

(திருமலைராயன் பட்டினத்து சட்ட நாதரின் இப்போதுள் வடிவம் பிற்காலத்தைச் சேர்ந்ததாகும். ஆதியில் மன்னன் அமைத்து வழிபட்ட மூர்த்தம் ஆலயத்துள் அறை ஒன்றில் வைக்கப்பட்டுள்ளது.)

புராணச் சிறப்பும் வரலாற்றுச் சிறப் பும் மிக்கவராக இந்தச் சட்டநாதர் விளங்கு கிறார்.

இவரை வணங்கி வந்தால் பகைவர்கள் தொல்லை விலகும். செல்வாக்கு பெருகும்.

சிதம்பரத்துச் சட்டநாதர்

சிதம்பரம் நடராஜர் ஆலயத்தில் இரண் டாம் பிராகாரத்தில் தேவசபை அமைந்துள்ளது. இது நடராசருக்குரிய ஐம்பெரும் சபைகளில் ஒன்றாகும். இத் திருக்கோயிலின் உலா மூர்த்திகளான சோமாஸ்கந்தர் முதலான மூர்த்தங்கள் இந்த தேவ சபையில் எழுந் தருளியுள்ளனர்.

இந்தச் சபையின் புறச்சுவர் மாடங்களில் பல துணைத் தெய்வங்கள் எழுந்தருளியுள் ளனர். இவர்களில் சங்காவர்த்தன கணபதி, அர்த்தசாம அழகர், புராண புஷ்கலா தேவி உடனான தருமசாஸ்தா முதலியோர் சிறப்புப் பெற்றவர்களாவர். இவர்கள் மாடத் துணைத் தெய்வங்களாக இருந்த போதிலும், பூசைக்குரியவர்களாக இருக்கின்றனர்

இவ்வகையில் தெற்கு மாடத்தில் சட்டநாதர் எழுந்தருளியுள்ளார். மற்றைய ஆலயங் களில் சட்டநாதர் வழிபாட்டில் வழக்கமாகக் கடைப்பிடிக்கும் நடைமுறைகள் இங்கே இல்லை. சட்டநாதர் கற்திருமேனியாக அமைக்கப்பட்டிருப்பதுடன் தினமும் அபிஷேக ஆராதனையும் நடைபெறுகின்றன.

பந்தணநல்லூர் பசுபதி சட்டநாதர்

தேவாரப் பாடல் பெற்ற சோழநாட்டுத் திருத்தலம் பந்தண நல்லூராகும். திருப்பனத் தாளுக்கு அருகில் சாலையைவிட்டு உள்ளே தள்ளி 6 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.

இது திருஞானசம்பந்தரும் அப்பர் சுவாமிகளும் பாடிப்பரவிய திருத்தலம். அம்பிகை வேணுபுஜாம்பிகை, தவக்கோல நாயகியாக வடக்கு நோக்கி எழுந்தருளியுள்ளாள்.

இத்தலத்தில் ஸ்ரீவிமானத்துப் பரம சுவாமியாக சட்டநாதர் எழுந்தருளியுள்ளார்- இவர் பசுபதீசுவரசுவாமி எழுந்தருளியி ருக்கும் ஸ்ரீவிமானத்தில் தென்மேற்கு முனைவில் தெற்கு நோக்கியவாறு எழுந்தருளியுள்ளார். இவரை சென்று வழிபட படிகள் அமைக்கப்பட் டுள்ளன. வழக்கம் போல் அபிஷேக பலிபீடம் முன்புறம் அமைந்துள்ளது. இவருடைய வடிவம் வண்ணம் தீட்டப்பட்டு அழகாக இரண்டு பூதங்களுடன் இருக்கிறது. இவர் சக்தி வாய்ந்த தெய்வமாகப் போற்றப்படுகிறார். (இப்படி வண்ணம் தீட்டப்படுவது பழைய வழிபாட்டு முறையாகும்.)

திருச்செங்காட்டங்குடிச்சீராளதேவனான சட்டநாதர்

திருச்செங்காட்டங்குடி காரைக்கால் கும்பகோணம் சாலையில் உள்ள திருமருகலுக்கு அருகில் உள்ள தலமாகும். திருப்புகலூர் திருமருகல், இராமநாதீச்சரம் ஆகிய திருத்தலங்கள் இதற்கு அருகில் இருக்கின்றன. இது கணபதி வழிபட்ட தலம். அதனால் இங்குள்ள சிவாலயம் கணபதீச்சரம் என்று அழைக்கப்படுகிறது.

காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த பல்லவமாமன்னன் நரசிம்மவர்மனிடம் படைத்தளபதியாக இருந்தவர் பரஞ்சோதியார். அவனுக்காக வாதாபியின் மீது படையெடுத்துச்சென்று அதைத் தீக்கிரையாக்கி வாகை சூடினார். அந்தவெற்றியால் பல்லவனுக்கு வாதாபி கொண்டான் என்பது பெயராயிற்று.

அவரது ஒப்பற்ற வெற்றியால் மன்னன் மகிழ்ந்தான். அவர் மாபெரும் சிவனடி யார் என்பதை அறிந்த அவன், அவருக்கு ஏராளமான செல்வத்தை அளித்துத் தமது சிவப் பணியைத் தொடரும்படிக்கூறி படைப் பிரிவில் இருந்து விடுவித்தான்.

அவர் காஞ்சீபுரத்திலிருந்து தனது சொந்தஊரான திருச்செங் காட்டங்குடிக்குச் சென்று தங்கினார். அவர் தினமும் சிவனடியார் ஒருவருக்காவது உணவளித்து அவரோடு இருந்து உண்பதே வழக்கம். இப்பணியைத் தொடர்ந்து செய்து வந்தார். அவருடைய பெருமையை உலகிற்குக் காட்ட விரும்பிய சிவபெருமான், ஒரு வடநாட்டுத் துறவி போல் திருச்செங்காட்டங்குடிக்கு வந்தார்.



சிறுத்தொண்டரிடம் தாம் ஆறுமாதத்திற்கு ஒருமுறையே உண்பது வழக்கம் என்றும், அப்படி உண்பது கூட ஒரு பிள்ளைக் கறியே என்பதையும் அவரிடம் கூறி அதனால் பிள்ளை ஒன்றைச் சமைத்து உண விடும்படிக் கேட்டார். சிறுத் தொண்டர் சற்றும் தயங்காது தனது மகன் சீராளனை வெட்டிச் சமைத்து அவருக்கு உணவாக இட்டார். உணவைப் பரிமாறி விருந்து படைக்கும் பொழுது

வடநாட்டுத் துறவியாக வந்த சிவபெருமான் மறைந்தார்.

உடனே சோமாஸ்கந்தராக (உமையன்னை, முருகனுடன் கூடியவராக வெளிப்பட்டார். அறுத்துச் சமைக்கப்பட்டிருந்த சீராளன் அழகிய வடிவுடன் திரும்பினான். சிவபெருமான், சிறுத்தொண்டர், அவரது மனைவி,குமாரன் சீராளன், தாதி வெண்காட்டுநங்கை, சந்தன நங்கை ஆகியோருக்குக் காட்சி தந்து முத்திப் பேற்றை அருளினார். தனது ஒப்பற்ற செய்கையால் சைவ சமயம் போற்றும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகச் சிறுத்தொண்டர் போற்றப்படு கின் றார்.

சிவபெருமான் சிறுத்தொண்டருக்கு அருள் செய்வதற்காக வடதேசத்து சந்நியாசியாக எடுத்துக்கொண்டு வந்த வடிவமே உத்ராபதியார் வடிவமாகும். திருச்செங்காட்டங்குடி சிவாலயத்தில் இந்த உத்ராபதியாருக்குப் பெரிய சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது. இதில் சிவபெருமானின் உத்திராபதியார் வடிவம் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. இவரே இத்தலத்தின் சிறப்பு மிக்க மூர்த்தியாகப் போற்றப்படுகிறார். இவருக்குச் சீராளர் என்பது பெயராகும். மற்ற சட்டநாதர்கள் பெயரளவில் சட்டநாதர்களாக இருக்கின்றனர். அவர்கள் திருமேனியில் சிலையிலேயேதான்(அங்கி) அமைக்கப்பட்டுள்ளது.)செங்காட்டங்குடிப் பெருமானுக்கு மட்டும் சிலையிலேயே சட்டை இருப்பதுடன், விழாவில் சிறப்பாகத் தைக்கப்பட்ட சட்டையும் அணிவிக்கப்படு கிறது.

இந்தச் சட்டைக்கு மாணிக்கக் கந்தை என்பது பெயராகும். இதனைக் கஞ்சுகம் எனவும் அழைக்கின்றனர். சித்திரை பரணி, ஐப்பசி பரணி, ஷெண்பகப் பூ உற்சவம் ஆகிய நாட்களில் இந்த அரிய அற்புதச் சட்டை அவருக்கு அணிவிக்கப்படுகிறது.

தண்டாயுதச் செல்வன்

தண்டாயுதபாணி என்றதும், எல்லோருக்கும் பழனிமலை மீது வீற்றிருக்கும் ஞான தண்டாயுதபாணி நினைவுக்கு வந்துவிடுகிறார். பழனிமலை முருகன் ஏந்துவது ஞானதண்டம். கண் அளவுக்கு உயரமுள்ள நீண்ட உறுதியான கோலே ஞான தண்டமாகும். இது ஞானிகளுக்கும் குருமார்களுக்கும் அடையாளச் சின்னமாக இருக்கிறது. இது நுனி முதல் அடி வரை சீரான கனமாது. இதில் பாதி அளவானது கோல் எனப்படும். அரசர்கள் செங்கோலை ஏந்துகின்றனர்.

நாம் இப்போது சொல்லும் தண்டபம் அடையாளமல்ல ஆயுதம் இதன் ஒரு முனை பிடிப்பதற்கு ஏற்ப கனம் குறைந்ததாகவும், படிப்படியாக கனம் கூடிக் கொண்டேசென்று மறுமுனை அதிக கனமாகவும்இருப்பது. பகைவர்களை அடித்து நொறுக்குவது. இதனை உத்தண்டம் எனவும் கூறுவர். சட்டநாதர் பகைவர்களைத் தண்டித்து அடக்கும் உத்தண்டத்தையே ஏந்துகின்றார். தண்டத்தைக் கொண்டிருப்பதால் தண்டபாணி என்றும், உத்தண்ட பைரவர் என்றும் அழைக் கப்படுகிறார். அதற்கு இடும்பாயுதம் என்பதும் பெயர்.

தண்டத்தையே பைரவராகப் போற்றி வழிபடுகின்றனர். காசியில் உள்ள பஞ்சபைரவர்களில் ஒருவருக்குத் தண்டபாணி என்பது பெயராகும்.

சட்டநாதருக்கு அன்பர்கள் மரத்தாலும் உலோகத்தாலும் செய்த தண்டாயுதங்களைக் காணிக்கையாகச் செலுத்துகின்றனர்.

குதிரை வாகனத்தில் வரும் சட்டநாதர்

காவல் தெய்வங்களாக விளங்கும் பைரவர்கள் வழிபாட்டில் அவர்களது வாகனங்களும் சிறப்பைப் பெற்றுள்ளன.

பொதுவாக, பைரவர் என்றதும் எல்லோருக்கும் அவரது நாய் வாகனமே நினைவுக்கு வந்துவிடுகிறது. ஆனால் புராணங்களின்படி பைரவர் அனேக வாகனங்களில் பவனி வருகின்றார். அவரது சேனாதிபதிகளான அஷ்டபைரவர்களை, அன்னம், மயில், யானை, குதிரை, சிங்கம், கருடன், காளை, ஆகிய வாகனங்களில் பவனி வருகின்றனர்.

பைரவர் சட்டநாதனாக ஆகாச மூர்த்தியாக வலம் வரும் வேளையில் குதிரை வாகனத்தில் பவனிவருகிறார். வேதங்களே அவருக்குக் குதிரை வாகனமாக இருக்கிறது. அக்குதிரை பறக்கும் வடிவினதாகும். அதனுடன் பட்டி வீரர்கள், (நாயின் முகமும், மனித உடலும் கொண்ட) பறக்கின்றனர். சட்டநாதர் சட்டங்களை இயற்றி ஆணைகளைப் பிறப்பித்து மக்களை வழி நடத்துபவர். அதியுன்னத வீரர். அதனால் தூய வெண்ணிறமான குதிரை மீது பவனி வருகிறார்.

திருப்புத்தூரில் யோகபைரவரின் உலாத் திருமேனியாக விளங்கும் சட்டநாதர் குதிரையில் வீதிவலம் வருவது இங்கே சிந்திக்கத் தக்கதாகும்.



அம்பரில் கோயில் கொண்டிருக்கும் ஆபத்தோத்தாரணர்

வைரவர் வடிவங்களில் மிக உயர்ந்ததாக இருப்பது சட்டநாதர் வடிவமாகும். இவருக்குரிய பெயர்களில் முதன்மை பெற்ற எட்டில் ஆபதோத்தாரணர் என்பது சிறப்புப் பெற்றதாக இருக்கிறது. அன்பர்களுக்கு ஆபத்து நேரிடும் போது தாமே முன்தோன்றி ஆபத்துக்களை அழித்து மகிழ்ச்சியைத் தருபவன் என்பது இதன் பொருளாகும். அம்பர் என்னும் தலத்தில் அவர் ஆபதோத்தாரணர் என்னும் பெயரில் சிவலிங்க வடிவிலும் அந்த ஆலய விமானத்தில் அழகிய சட்டநாதர் வடிவிலும் காட்சி தருகிறார். இக்கோயில் ஆபதோத்தாரண சுவாமி கோயில் என்று குறிக்கப்பட்டாலும், நடைமுறையில் மக்களால் சட்டநாதர் கோயில் என்றே அழைக்கப்படுகிறது. பத்துநாட்கள் விழா காணும் சட்டநாதரில் இந்தச் சட்டநாதரும் ஒருவராவார்.

அம்பரம் என்ற சொல் ஆடையையும், ஆகாச வெளியையும் குறிக்கும் சொல்லாகும். பொற்பூக்கள் பூண்ட ஆடையை அணிந்திருப்பதால் சித்ராம்பரன் என்று அழைக்கப் படுபவரும், ஆகாச வெளியில் நிறைந்திருப்பவருமான சட்டநாதருக்குரிய தலமென்பதால், இது அம்பர் எனப்பட்டதென்பர். சட்டநாதருக்குரிய பெயர்களாக அம்பரன், அங்தரன் என்ற பெயர்கள் வழங்குவது இங்கே சிந்திக்கத்தக்கதாகும்.

இனிஇத்தலத்தின் சிறப்புக்களையும் இங்கு எழுந்தருளியிருக்கும் ஆபதோத்தாரண மூர்த்தி ஆலயத்தினையும் அதில் எழுந்தருளியிருக்கும் சட்டநாத மூர்த்தியையும் கண்டு வணங்கி மகிழலாம்.

சோழநாட்டுத் தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் ஒன்றாக இருப்பது அம்பர் என்னும் திருத்தலம். இந்நாளில் அது அம்பல் என வழங்குகிறது. சிவபெருமானின் சாபத்தால் அன்ன வடிவத்துடன் அலைந்த பிரமதேவன், இங்கு புன்னை வனத்தின் கீழ் இருந்த சிவலிங்கத்தை வழிபட்டுப் பழைய உருவத்தைப் பெற்றான்.

அறுபத்துமூன்று நாயன் மார்களில் ஒருவரான சோமாசிமாற நாயனார் அவதரித்து சோமயாகம் செய்து இறைவனுக்கு அவிர் பலி அளித்துப் பேறு பெற்ற தலம். சுந்தரர் சோமாசிமாற நாயனாரை அம்பரான் சோமாசிமாறன் என்று இந்த ஊருடன் சேர்த்துப் போற்றுவது குறிப்பிடத் தக்கதாகும்.

இங்கு ஊரின் நடுவே அழகிய மாடக் கோயிலாக அமைந்திருப்பது பிரம்ம புரீசுவரர் ஆலயமாகும். இது கோட்செங்கட் சோழன் கட்டிய மாடக் கோயில்களில் ஒன்றாகும். இதனை,

அரிசிலம் பொருபுனல் அம்பர் மாநகர் குரிசில்
செங்கண்ணவன் கோயில்

என்று திரு ஞான சம்பந்தர் குறித்துள்ளார்.

இங்குள்ள இறைவன் பிரம்ம புரீசு வரர், அம்பிகை வம்புவனப் பூங்குழலி (சுகந்த குந்தளாம்பிகை)

இக்கோயிலுக்குத் தென்கிழக்கில் ஏறத்தாழ 1/2 கி.மீ. தொலைவில் ஆபதோத்தாரணர் என்னும் சிவாலயம் அமைந்துள்ளது. ஆபதோத்தாரணர் என்பது சட்டநாதனுக்குரிய பெயர்களில் ஒன்றாகும். அப்பெயராலேயே இங்கு சிவாலயம் அமைக்கப்பட்டுள்ளது. கருவறையில் பெரிய அழகிய சிவலிங்க மூர்த்தியாக ஆபதோத்தாரணர் என்னும் பைரவ லிங்கத்தைக் காண்கிறோம். மகா மண்டபத்தில் தெற்கு நோக்கி அமைந்த சந்நிதியில் அமிர்தாம்பிகை என்னும் அம்பிகை தெற்கு நோக்கியவாறு காட்சி தருகிறாள்.



ஸ்ரீசட்டநாதர்-உலாத்திருமேனி
அம்பல்

இவர்களை வணங்கி வலம் வரும் போது கருவறை ஸ்ரீ விமானத்தின் தெற்குக் கிரீவத்தில் எழுந்தருளியுள்ள சட்டநாதரைக் காண்கிறோம். இரண்டு பெரிய கணங்கள் இவருக்கு இருபுறமும் நின்று கொண்டிருக்கின்றனர்.

இவருக்கு முன்பாகப் பெரிய மேடை மீது அபிஷேக பீடம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பீடத்திற்கே அனைத்து அபிஷேக அலங்காரங்களும் செய்யப்படுகின்றன. சட்டநாதரை அருகில் சென்று தரிப்பதற்கு வகையில் ஏறுவதற்கும் இறங்குவதற்குமான படிகள் அமைக்கப்பட்டுள்ளன.

பிராகாரத்தின் வடமேற்கு முனையில் சூலதீர்த்தம் என்னும் கிணறு உள்ளது. இது மருத்துவ குணம் மிக்கதாகும். இதில் மூழ்கிச் சட்டநாதரை வழிபடுபவர்களைப் பேய், பிசாசு, பில்லி, சூன்யம் முதலியவை அண்டாது.

இங்குச் சட்டநாதருக்குப் பெரிய அழகிய உலாத்திருமேனி உள்ளது.

இந்த சட்டநாதர் மிகப்பெரிய வர தான மூர்த்தியாகத் திகழ்கிறார். எண்ணற்றவர்கள் இவரைக் குலதெய்வமாகக் கொண்டுள்ளனர். இவருக்குச் சித்திரை மாதத்தில் பத்து நாட்கள் விழா கொண்டாடப்படுகிறது. சித்திரை வருஷப் பிறப்பன்று இவருக்குக் காவடி எடுத்து வந்து அபிஷேகம் செய்கின்றனர். இப்போது பால்குடம் எடுப்பதும் அதிகமாக இருக்கிறது.

கோயில் பிராகாரத்தில் வடகிழக்கு முனையில் வசந்த மண்டபம் இருக்கிறது. சித்திரைத் திருவிழாவின் பத்துநாட்களிலும்

உற்சவமூர்த்தி வசந்த மண்டபத்தில் எழுந்தருளியிருந்து, அபிஷேக அலங்காரங் களை ஏற்றுக் கொள்வதுடன் வீதியுலா வந்து அன்பர்களுக்கு அருள்பாலிக்கிறார். சட்ட நாதர் அழகிய சிவலிங்க மூர்த்தியாகக் காட்சி தருவது இத்தலத்தின் சிறப்பாகும்.

அம்பர் தலத்தின் சிறப்புக்களை விளக்கி மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள் திருஅம்பர் புராணம் என் னும் பெயரில் தலபுராணம் பாடியுள்ளார். 1007க்கும் அதிகமான பாடல்களை கொண்ட இத்தலபுராணத்தின் தொடக்கத் தில் இடம் பெற் றுள்ள கடவுள் வாழ்த்துப் பகுதியில் சட்டநாதர் துதி இடம் பெற் றுள்ளது. மேலும், இந்த ஆபதோத் தாரண மூர்த்தியின் பெருமைகளை விளக்கும் வகையில் 75 திருவிருத்தங்களால் ஆன வைரவப் படலம் என்னும் பகுதியும் பாடப்பட்டுள்ளது.

இப்போது முதலில் வைரவர் துதி யையும் தொடர்ந்து புராணம் கூறும் தலவர லாற்றின் சுருக்கத்தையும் காணலாம்.

சுவைமுனம் தெரிந்து பின்பு தற்கு உதவும்
செவை மலர்க்கிழவன் தலைச்
சுவை முன்னம்தெரிந்துபின் கைக்கு உதவு உகிரும்
நவை கொள்மால் நெய்த்தேர்ச்
சுவைமுனம் தெரிந்துநயந்துபின் அத்தலைக்குதவும்
சுவைபடு திறர் சூலமுங் கரங்கொண்ட
கடவுள்தன் சேவடி போற்றி

இதற்கு, முன்னம் தூய பெரிய தவத் தை உடையவரான கண்ணப்பர் பன்றி, இறைச்சியைச் சுட்டு, அதில் தேன் விட்டு, அந்த இறைச்சியை வாயில் இட்டுச் சுவை யானதைத் தேர்ந்தெடுத்து தேக்கிலையில் வைத்துப் பெருமானுக்கு அளித்தார். அது போல் தாங்களும் தருவோம் என்று கருதிய பெருமானின் கைகளில் உள்ள நகங்கள் பிரம்மனின் தலைகளில் ஒன்றைத் தேர்



அருள்மிகு சட்டநாதர் - அம்பர் - ஆபதோத்தாரணர் கோயில்

தெடுத்துக் கிள்ளிச் சுவை பார்த்து அவருக்கு அளித்தது. அதுபோல் சூலமானது திருமா லின் இரத்தத்தைச் சுவைத்து அவரது கையில் உள்ள கபாலத்திற்கு அளித்தது. கபாலம் அதைச் சுவைத்துப் பார்த்துப் பெருமானுக்கு அளித்தது. இப்படி வேடன் செய்த மறத்திற்கு ஏற்பத் தானும் பெரு மானுக்கு உணவை அளிக்க விரும்பிய நகங்களையும், சூலத்தையும், கபாலத் தையும் ஏந்தியுள்ள சட்டநாதக் கடவுளின் திருவடிகளைப் போற்றுகிறேன் என்ப தாகும்.

இக்கட்டுரையில் தொடக்கத்தில் நாம் திரட்டிய தகவல்கள்படி சிவபெருமான் இங்கு ஆபத்துக் காலத்தில் நமக்கு எதிரே தோன்றி ஆபத்தை அழித்து மனமகிழ்ச்சி தரும் ஆபதோத்தார சிவலிங்கமாகவும், சட்டங்களை நமக்களித்து அதன்படி வாழ் விக்கும் பெருமானாகச் சட்டநாதர் எனும் பெயரில் இங்கு வீற்றிருப்பதாகக் குறித்துள் ளோம்.


தலபுராணம் இதற்கு வேறுவிதமான கதையை உரைக்கிறது. அதன்படி, இக் கோயிலின் பெயர் புவனேஸ்வரம் என்ப தாகும். இங்குள்ள இறைவன் புவனேசு வரர். ஒரு சமயம் புலத்தியர் மரபில் வந்த சங்காரசீலன் என்பவன் பிரமனை நோக்கிப் பெருந்தவம் புரிந்து அவர் அருளால் அறிய வரங்களைப் பெற்றான். அவன் தனது அசுர புத்தியால் தேவலோகத்தைக் கைப்பற்றிக் கொண்டான் அவனுக்குப் பயந்து தேவேந் திரன் ஓடி ஒளிய வேண்டியதாயிற்று.

அவனும் அவனது பரிவாரங்களும் பிரம்ம தேவனின் ஆணைப்படி இத்தலத் திற்கு வந்து மறைந்து வாழ்ந்து வந்தனர். அப்படி வாழும் நாளில் அவர்கள் இங்கு புன்னை வனத்திடையே பொலிந்து விளங்கும் சிவபெருமானைக் கண்டு பூசித்து வந்தனர்.

நாரத முனிவரின் மூலம் இந்திரன் இங்கே ஒளிந்திருப்பதைஅறிந்து கொண்ட சங்கார சீலன் அவர்களை அழிக்க இங்கு வந்தான்.

தனக்கு வர இருக்கும் ஆபத்தை அறிந்து கொண்ட இந்திரன் கலங்கினான். புன்னை வனத்துப் பெருமானைச் சரண டைந்து தம்மையும் தேவர் கூட்டத்தையும் காக்குமாறு வேண்டினான். சிவபெருமான் பைரவரை அழைத்துச் சங்காரசீலனை வென்று வருக என்று ஆணை கொடுத்து அனுப்பினார். வைரவர் விரைந்து சென்று சங்கார சீலனை அழித்து மீண்டார்.

சிவபெருமான் பைரவரை அத்தலத்தி லேயே தங்கிக் காவல்புரியும்படி ஆணை இட்டார். அதை ஏற்றுக் கொண்ட வைரவர், பிரம்மபுரீசுவரர் ஆலயத்திற்கு வடகிழக்கில் ஒரு லிங்கம் அமைத்து வழிபாடு செய்தபின்




முன்னால் இருப்பது அபிஷேக பீடம். பின்னால் தெரியும் சந்நிதியில் சட்டநாதர்- அம்பல்


அக்கோயிலிலேயே தானும் கோயில் கொண் டான். அவன் அமைத்து வழிபட்ட லிங்கமே புவனேசுவரர் என்பதாகும்.

புராணம் அந்நாளில் அங்கிருந்த நடை முறையை ஒட்டிப் பாடப்பட்டதென்று கொள்ளவேண்டும். இங்கு சிவபெருமா னே ஆபதோத்தாரண லிங்கமாகவும், சட்ட நாதராகவும் இருக்கிறார் என்பதே தொன்மை வரலாறாகும்.

அம்பர் ஆபதோத்தாரண சட்டநாத வைரவரை வணங்கி வாழ்வில் வளம் பெறுவோம்.

அம்பர் மாகாளத்துச் சட்டநாதர்





இடது பக்கம் - அம்பர் மடாகாளத்து ஆலயத்தின் வடக்குத் திருமாளிகை மீதுஅமைந்துள்ள சட்டநாதர் சந்நிதி வலது பக்கம் - அச்சந்நிதியில் எழுந்தருளியிருக்கும் சட்டநாதர்.

முன்பக்கத்தில் அம்பர் தலத்து ஆப தோத்தாரணனைப் பார்த்தோம். இப்போது அத்தலத்திற்கு அருகிலுள்ள அம்பர் மாகாளத்துச் சட்டநாதரைப் பார்ப்போம்.

தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்களான அம்பர், அம்பர் மாகாளம் ஆகியவை அடுத்தடுத்து உள்ள இரட்டைத் திருப்பதிகளாகும். அம்பர் (அம்பல்) தலத்திற்கு மேற்கில் ஒரு கிலோமீட்டர் தொலைவில் அம்பர் மாகாளம் இருக்கிறது. இது மகாளன் என்ற பாம்பும் மாகாளி தேவியும் வழிபட்ட தலமாகும். இங்கு காளிதேவி வெண் மணலைக் கொண்டு சிவலிங்கம் அமைத்து வழிபட்டதாகக் கூறுகின்றனர்.

இத்தலத்து இறைவனைக் காளி வழிபட்டுப் பேறுபெற்றதைப் போற்றும் வகையில் திருஞானசம்பந்தர் இறைவனை நம்காளி ஏத்தும் அழகனார் என்று பாடிப் பரவுகிறார்.

இங்குள்ள மகாகாளேசுவரர் ஆலயம் இரண்டு பிராகாரங்களை உடையதாகும். முதல் பிராகாரத்தில் மதிலை ஒட்டி உட்புறம் திருமாளிகைப் பத்தியும், அதன் மீது பத்தி மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளன. இப்படி அமைக்கப்பட்டுள்ள வடக்குத் திருமாளிகை மண்டபத்தின்மீது தெற்கு நோக்கியவாறு சிறிய சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது.

ஏகதள விமா னத் துடன் காணப்படும் இந்தச் சந்நிதிக்கு மேலேறிச் செல்ல படிக்கட்டுகளும் அமைந்துள்ளன.

இந்தச் சிறிய சந்நிதியில் சட்டநாதர் ஏகாந்தமாக எழுந்தருளியிருந்து அன்பர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார். திருமாளிகை மண்டபத்தின் மீது விளங்கும் இவர் அழகியதோற்றத்துடன் விளங்குகிறார். பிரபை, கணங்கள் இன்றிக் காட்சி தரும் இவரது வடிவம் சிறியதாக இருக்கிறது. சிறியதாக இருந்தாலும், இந்த அழகிய வடிவம் கண்ணையும் கருத்தையும் கவர்வதாக இருக்கிறது. இவருக்கு அன்பர்கள் நேர்ந்து கொண்டு சிறப்பு வழிபாடுகளைச் செய்து வருகின்றனர்.

இங்கு காளிதேவி சிவலிங்கம் அமைத்து வழிபட்டதுடன் இவரையும் வழிபட்டுப் பேறு பெற்றாள். அவள் சந்நிதி இவருக்கு நேராக இரண்டாம் பிராகாரத்தில் தெற்குப் பிராகாரத்தில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

காளி வழிபாடு செய்யும் கணநாதராக இந்தச் சட்டநாதர் விளங்குகிறார்.

இன்னம்பர் – எழுத்தறியும் சட்டநாதர்

அம்பர்,அம்பர்மாகாளம் போலவே இன்னம்பர் என்னும் தலமும் சட்டநாதர் வழிபாட்டிற்குரிய தலமாக இருக்கிறது. இது கும்பகோணத்திலிருந்து சுவாமிமலை செல்லும் வழியில் அமைந்துள்ள கொட்டையூரில் இருந்து ஏறத்தாழ 8 கி.மீ. தொலைவில் இருப்பதாகும். இது பெரிய அளவிலான தூங்கானை மாடக் கோயிலாகும். இந்த தூங்கானை மாடத்தில் பெரிய சிவலிங்கமாக எழுத்தறியும் நாதர்(அட்சய புரீசுவரர்) எழுந்தருளியுள்ளார். இந்த விமானத்தில் தட்சணாமூர்த்திக்கு நேர் மேலே சட்டநாதர் எழுந்தருளியுள்ளார். இவருக்கு எதிரில் பிராகாரத்தில் பலிபீடம் அமைந்துள்ளது. இவர் எழுத்தறிவிக்கும் சட்டநாதராக விளங்குகிறார்.

கழல் சேவடியான்



சட்டநாதசுவாமி வீரக்கழலை அணிந்தவர். அவர் நடக்கும் வேளையில் அது ஓயாது ஒலிக்கிறது. அதனைக் குரைகழல், அதிருங்கழல் எனப் பலவாறு சிறப்பிக்கின்றனர். திருச்செங்காட்டங்குடியில் உத்ராபதியார் வீதிகளில் எழுந்தருளும் போது பெரிய வட்டமான கழல்கள் அவருக்கு முன்பாக எடுத்துச் செல்லப்படுவதுடன், அவ்வப்போது அசைத்து ஒலிக்கப்படுகின்றன. பெண் தெய்வங்களுக்கு முன்பாகச் சிலம்புகளை ஏந்தி ஒலித்து ஆடிச் செல்வது போல உத்ராபதியார் வழிபாட்டில் அவருக்கு முன்பாகக் கழல்கள் ஒலிக்கப்படுகின்றன.

திருவிடைமருதூர் சட்டநாதர்

மண்ணகத்து மக்களோடு, வானவரும், ஞானிகளும் விரும்பித் தேடி வந்து வழிபடும் இடமாக இருப்பது திருவிடை மருதூர் ஆகும்.


இத்தலத்தில் சிவபெருமான் மருதவனத்து மாணிக்கமாக மகாலிங்க மூர்த்தியாக எழுந்தருளியிருந்து அன்பர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றார். இங்கு வைரவ வழிபாட்டினர் கொண்டாடும் பைரவர், க்ஷேத்ரபாலகர், வடுகநாதர் (சட்டநாதர்) ஆகிய மூன்று நிலைகளிலும் பைரவ மூர்த்திகளைக் காண்கிறோம்.

இதில், முதல் மூர்த்தியான பைரவர் கைலாசப் பிரகாரத்தின் வடகிழக்கில் உள்ள சிங்கதீர்த்தக் கிணற்றின் கரையில் தெற்கு நோக்கி அமைந்துள்ள தனிச் சந்நிதியில் எழுந்தருளியுள்ளார். இச்சந்நிதி முகமண்டபம், ஸ்ரீவிமானம் ஆகியவற்றுடன் அழகாகக் காட்சி தருகிறது.

இரண்டாவதான க்ஷேத்ரபாலர் சுவாமி சந்நிதியின் முதற்சுற்றில் நுழைவாயிலுக்கு வடபுறம் திருமாளிகைப் பத்தியில் எழுந்தருளியுள்ளார். மகாலிங்க சுவாமிக்குரிய அஷ்டபரிவாரங்களில் கூறப்படும் பைரவர் இவரேயாவார்.

மூன்றாவதாக வடிவம் சட்டநாதர் வடிவமாகும். இந்த மூர்த்தி இப்போது அம்மன் சந்நிதியின் பெரிய பிராகார மண்டபத்தின் வடகிழக்கில் அமைந்துள்ள தீர்த்தக் கிணற்றின் கரையில் உயரமான மேடைமீது தெற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். இவர் மரத்தால் ஆனவர். சாந்தும் புனுகுநெய்யும் பூசப்பட்டு பளபளப்பாக இருக்கிறார். இவருக்கான பூஜா பலிபீடம் நேர்எதிரில் தெற்குச் சுவரினை ஒட்டி அமைந்துள்ளது.

இவர் ஆதியில் மருதவாணரான மகாலிங்க சுவாமியின் ஸ்ரீவிமானத்தில் எழுந்தருளி இருந்த மூர்த்தியே ஆவார். பின்னாள் திருப்பணி செய்தவர்கள். இவரை அங்கிருந்து இடம்பெயர்த்து விட்டனர். பின்னாளில் இவர் கனவில் தோன்றி அறிவுறுத்திய



வண்ணம் இப்போதிருக்கும் உயர்ந்த மேடை மீது இவரை அமைத்து உரிய முறையில் பிரதிஷ்டை செய்துள்ளனர். இவர் பிரம்ம ஹத்தி தோஷம் முதலான சகல தோஷங் களையும் வேறோடு அழித்து அன்பர் களைக் காக்கும் வரதான மூர்த்தியாவார். இவருக்குப் பிருகத் வடுகர், மகா வடுகர் என்பதும் பெயர்களாகும்.

ஆறகளூர் இராஜ கோபுரத்து சட்டநாதர்

அஷ்டபைவரர் வழிபட்டிற்குரிய புகழ் பெற்ற தலங்களில் ஆறகளூர் ஒன்றாகும்.

சோழர்களுக்கு உட்பட்டு ஆட்சி புரிந்துவந்த வாணகோவரையர்கள் என்னும் சிற்றரசர்கள் இதனைத் தலை நகராகக் கொண்டு இப்பகுதியை ஆட்சிபுரிந்து வந்துள்ளனர். ஊருக்கு அருகில் வசிஷ்டநதி ஓடுகிறது.

இங்குள்ள பெரியநாயகி உடனான காமநாதீசுவரர் ஆலயத்தில் அஷ்டபைரவர்கள் எழுந்தருளியுள்ளனர். மக்கள் நடைமுறையில் இதை அஷ்டபைரவர் கோயில் என்று அழைத்தாலும் இங்கு ஆதியில் பஞ்ச பைரவர்களே இருந்துள்ளனர்.

யானைப் படைகளை வைத்திருப்பவர்கள் தமது யானைகளுக்கு மதம் பிடிக்காமலும், அவை தமது ஆணைக்கு அஞ்சி நடக்கும் குணத்தோடு இருக்கவும், நோய் வாய்ப்படாதிருக்கவும், பஞ்சபைரவர்களை வழிபடுவது வழக்கம். பெரிய யானைப் படைகளை வைத்திருந்த வாணகோவரையர்கள் இங்கே பஞ்சபைரவர்களை அமைத்து வழிபாடு செய்து வந்துள்ளனர்.

பஞ்சபைரவர்கள் என்பவர்கள் சௌந்திர பைரவர், மசான பைரவர், சம்ஹார பைரவர், உன்மத்த பைரவர், அநாதி பைரவர் எனும் ஐவராவர். வழுவூர் கஜசம்ஹாரர் ஆலயத்தில் இடம் பெற்றுள்ள பெரிய யந்திரத்தில் இந்த பைரவர்கள் குறிக்கப் பட்டுள்ளது. இங்கே நினைவிற் கொள்ள வேண்டியதாகும். இந்த பஞ்சபைரவர்களில் முதன்மை பெற்றவரான சௌந்தர்ய பைரவர் மகாமண்டபத்தில் வடக்குத் துவாரபாலகருக்கு எதிரிலும், மசானபைரவர், சம்ஹார பைரவர் ஆகிய இருவர் தெற்கு வடக்கு திருமாளிகைப் பத்திகளிலும், உன்மத்தர், அநாதிபைரவர் ஆகிய இருவர் உள்கோபுரக் குடைவரைகளிலும் எழுந் தருளியுள்ளனர்.

இந்த ஐந்து பைரவர்களுடன் பின்னாளில் க்ஷேத்ரபாலகர், ரிஷி கோபுரத்தில் இருக்கும் சட்டநாதர், அவருக்கு அபிஷேக பீடமாக இருக்கும் வலம்புரி மண்டபம் ஆகிய மூன்றையும் சேர்த்து அஷ்டபைர வர்களாகக் கொண்டு அவர்களுக்கு அஷ்ட

பைரவர்களின் பெயர்களைச் சூட்டி வழி படுகின்றனர்.அதனால் ஆறகளூரில் இருந்த பஞ்சபைரவ வழிபாடு இப்போது அஷ்ட பைரவ வழிபாடாக மாறிச் சிறப்புப் பெற்றுள்ளது.

இனி நாம் இத்தலத்தில் கபால பைர வர் என்று மக்கள் கொண்டாடும். சட்ட நாதரைப் பற்றிச் சிந்திக்கலாம்.இவர் உள்கோபுரத்தின் கிரீவப் பகுதியில் தென் கிழக்கு முனையில் தெற்கு நோக்கியவாறு எழுந்தருளியுள்ளார். இவர் இருக்கு மிடத் தின் முன்புறத்தை வளர்த்திக் கட்டி சிறிய சந்நிதியாக்கியுள்ளனர்.

கருவறையில் தென்புறமுள்ள படிகள் வழியே மேலே மண்டபத்தின் மேல் தளத் திற்குச் சென்று அங்குள்ள படிகள் மூலம் ஏறிச்சென்று இவரை அருகில் தரிசிக்கலாம். இவர் திருமேனி சுதையால் செய்யப்பட்டுப் புனுகு நெய் பூசப்பட்டதாகும். இவர் வலதுகையில் கபாலத்தை ஏந்தி, இடது கையைத் தண்டத்தின் மீது ஊன்றியுள்ளார். இவர் பெயருக்கேற்ப நீண்ட அங்கியை அணிந்துள்ளார்.

இவருக்கு நேர் எதிரில் தெற்குப் பிரா காரத்தில் இவருடைய அபிஷேகத் தான மான பலிபீடம் அமைந்துள்ளது. இதற்கு அழகிய நான்குகால் மண்டபத்தை அமைத் துள்ளனர். மண்டபம் வலம்புரி மண்டபம் என்று அழைக்கப்படுகிறது. இதுவே ஸ்ரீராஜ கோபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் பரமசுவாமியான சட்டநாதரின் கொலு மண்டபமாகும். இதன் மீது ஏகதள விமான மும் விமானத்தில் அஷ்டபைரவர்களின் சுதைச் சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன. இந்த நாலுகால் மண்டபத்தைச் சுற்றி நடவாண மண்டபம் இருக்கிறது. (மக்கள்



ஆறகளூர் - சட்டநாதர்

இந்தப் பலிபீடத்தினை பீஷ்ண பைரவர் என்று அழைத்து வழிபடுகின்றனர்.)

ஆறகளூர் சட்டநாதரை வழிபட்டால் அஷ்டஐஸ்வர்யங்களும் உண்டாகும் என் பது நம்பிக்கையாகும்.

இந்நாளில் வடக்குப் பிராகாரத்தில் திருமாளிகைப் பத்தியில் மேற்கு நோக்கி எழுந்தருளியிருக்கும் சம்ஹார பைரவ ருக்கே சிறப்பு வழிபாடுகள் நடத்தப் படுகின்றன. அஷ்டமி நாட்களில் ஏராள மான மக்கள் இங்கு வந்து வழிபாடு செய்கின்றனர்.

ஆறகளூர் பைரவர் வழிபாட்டிற்குரிய வரலாற்றுப் புகழ்பெற்ற நகரமாக இருக் கிறது.

சட்டநாதரும் சந்திரசேகரரும்

அதியுன்னத வீரதீர பராக்கிரம தெய்வமாகவும், போர்க்கடவுளாகவும் போற்றப்படும் மகா வைரவக் கடவுள் அன்பர்களுக்கு அருளும் வேளையில், சோமாஸ்கந்த மூர்த்தியாகக் காட்சி தருகிறார்.

திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டரின் பக்தியையும் அடியவர்க்கு உணவூட்டும் திறத்தையும் உலகிற்குக் காட்டச் சிவபெருமான் உத்திராபதியாராக வந்து, பிள்ளைக் கறியைக் கேட்டுப் அவர்களுக்கு அருள் புரியும் வேளையில், தனது வைரவக் கோலத்தை விடுத்து மறைந்து குடும்பக் கோலமாக உமை, முருகனுடன் சேர்ந்து சோமாஸ்கந்தராக வெளிப்பட்டு அருள் புரிந்தது இங்கே சிந்திக்கத் தக்கதாகும்.

அதுபோல் சட்டநாதராக வரும் சிவபெருமான்அன்பர்களுக்கு அருளும் போது தனது வீரதீர உருவத்தை மாற்றி சந்திரசேகரராக உமையுடன் கூடியவராகக் காட்சி தருகிறார். இச்செயலை விளக்கும் வகையில் நாகப்பட்டினத்து சட்டநாதர் ஆலயத்தில் உள்ள சந்திரசேகர மூர்த்தியின் வடிவம் அமைந்திருப்பதைக் காண்கிறோம்.

சட்டநாதரை இரண்டு திருக்கரங்களுடன் அமைப்பதே வழக்கமாகும். அவர் சந்திரசேகரராக வடிவம் மாறிக் காட்சி தரும் போது நாற்கரங்களுடன் காட்சி தருகிறார். மேற் கரங்களில் மான், மழு ஏந்தும் இவர், தனது முன் வலது கரத்தில் அமுதகலசத்தை ஏந்தி யிருப்பதுடன், தாமே சட்டநாதர் என்பதைக் குறிக்க இடது கரத்தைத் தண்டத்தின் மீது



ஊன்றியுள்ளார்.(இதுசந்திரனின் அமுதம் நிறைந்து வழிவதைக் குறிக்கிறது.)

மேலும், சட்டநாதருக்குரிய நீண்ட அங்கியையும் அணிந்திருக்கிறார். அத்துடன் முழங்கால் வரை நீண்ட கிண்கிணி மணி மாலையையும் சூடியுள்ளார். தலைமீது சடைமுடியை வட்டணையாக முடிந்திராமல் ஜடா மகுடமாகவே முடிந்துள்ளார்.

சட்டநாதர் வழிபாடு சந்திரசேகரர் வழிபாட்டுடன் இணைந்ததாகும். இதை ஒட்டியே சட்டநாதருடன் எழுந்தருளியிருக்கும் அம்பிகைக்கு அமுதாம்பிகை, ஆனந்தவல்லி என்பது பெயர்களாயின.

(சந்திரனில் அமுதம் நிரம்பி வழி கிறது. சிவபெருமான் சந்திரனாக இருக்கும் போது அதில் பார்வதி அமுதமாக இருக் கிறாள் என்று கூறப்படுவது இங்கே சிந்திக்கத் தக்கதாகும்.)

சீர்காழி சட்டநாதர் மீது பாடப் பட்டுள்ள ஆபதோத்தாரண மாலையின் இறுதிப் பாடலில் வடுகமூர்த்தியைச் சந்திர சேகரப் பெருமானாகவே போற்றித் துதிக்கப் படுகிறார் அப்பாடல்,

இந்திரன் வாழ்க்கையும் நான்முகன்
வாழ்க்கையும் ஈந்துளவோன்
நந்தமில் வாழ்க்கையும் பெற்றாலு(ம்)
நின்னடி யார்களுக்குப்
புந்திசெய் வாழ்க்கையை யொவ்வாது
காண்ஒளி பூண்ட இளஞ்
சந்திரசேகரனே காழி
ஆபதுத் தாரணனே

என்பதாகும். அமுதவல்லி பங்கனான சட்டநாதன் அருளால் சகல செல்வங்களையும் அடைந்து வாழ்வோம்.

கிண்கிணி மாலை



சட்டநாதசுவாமிஅணிந்துள்ள மணி மாலைக்குக் கிண்கிணி மாலை என்பதுபெயர். இது இடதுதோளில் தொடங்கி மார்பில் தவழ்ந்து வலதுமுழங்கால் வரை நீண்டு பின்புறமாக வந்து மீண்டும் தோளில் முடிவதாகும். சுருக்கச் சொல்வதென்றால் பூணூல் போல் அணியப்படும் சற்றுப் பெரிய அளவிலான ஒலிக்கும் மணிகள் கோர்த்த மாலையாகும். அதியுன்னத வீரர்கள் வலது முழங்காலில் ஒரு மணியை அணிவர். இது எவருக்கும் அடிபணியாதவன் என்னும் வீரத்தின் அடையாச் சின்னங்களுள் ஒன்றாகும். அப்படிப் பட்ட வீரர்களை அடக்கி ஆள்பவர்கள் அவர்களை வெற்றி பெறுவர்கள் அந்த மணியைப் பறித்துத் தனது மாலையில் கோர்த்துக் கொள்வர். இப்படி எண்ணற்ற வீரர்களை வெற்றி கொண்டு பறித்த மணிகளைக் கோர்த்து சட்டநாதர் வீரச்சங்கியாக அணிந்திருக்கிறார். இதுவே கிண்கிணி மாலையாகும். இது அவரது ஒப்பற்ற வீரத்தின் அடையாளமாகும்.

சட்டநாதனும்-சட்டைநாதனும்

சிவபெருமானின் வைரவக் கோலங்களில் சட்டநாதர் என்பதும் ஒன்றாகும். இவர் ஆகாசத்தை இடமாகக் கொண்டிருப்பதால் ஆகாச பைரவர் என்றும் ஆகாச சரபர் என்றும் அழைக்கப்படுகிறார். இவரைச் சட்டைநாதர் எனவும் அழைக் கின்றனர். சட்டநாதர், சட்டைநாதர் என்ற பெயர்களில், எது சரியான பெயர் என்பது பலரது கேள்வியாக இருக்கிறது. இந்த இரண்டு பெயர்களுக்கான விளக்கத்தையும் காணலாம்.அதற்கு மேலும் மூன்றாவதாகக் கூறப்படும் விளக்கத்தை யும் இத்தொடரில் காணலாம்.

முதலில் சட்டநாதர் என்ற பெயருக்கான விளக்கத்தைக் காணலாம்.

சட்ட என்ற சொல் பாதுகாத்தல், நெறிப்படுத்துதல், வரையறை செய்தல், எல்லை வகுத்தல் முதலான பொருள்களைத் தருகின்றன. மனித குலம் தன்னை காத்துக் கொள்ள சமுதாயத்தில் அனேக வரைமுறைகளைச் செய்து வகுத்துள்ள நெறிக்குச் சட்டம் என்பது பெயர். கல்வெட்டுக்களில் ஒரு செயலைக் கவனித்துப் பாது காப்பவர்கள் சட்டமர் என்று குறித்திருப்பது இங்கே கவனிக்கத் தக்கதாகும். மாணவர்களை ஒழுங்கு படுத்தி அவரது செயல்களைக் கவனித்துக் கொள்ளும் மாணவன் சட்டாம்பிள்ளை எனப்படுகிறான். இவற்றின் மூலம் சட்டம் என்பது ஒரு கூட்டத்தை வரையறை செய்துகாப்பது. தீயவழியில் செல்லாமல் அதை நெறிப்படுத்தி நன்கு செயல்படுத்துவது என்பதை அறியமுடிகிறது.

மானிடர்களைத் தமது சட்டத்தின் மூலம் ஒழுங்குபடுத்தி நல்வழியில் செலுத்துவதால், வைரவ மூர்த்திக்குச் சட்டநாதன் என்பது பெயராயிற்று. மேலும், சட்டம் என்பது காணக் கூடிய பொருளல்ல. அது ஒழுக்கம் சார்ந்த நெறிமுறை. அதை நாம் கண்களால் காண முடியாது. ஆனாலும் அது நம்மைக் கட்டுப்படுத்துவது.

சட்டம் கண்ணுக்குப் புலப்படாததைப் போலவே அவரும் கண்ணுக்குப் புலப்படாதவர். ஆனாலும் தனது ஆணையை எங்கும் செலுத்துபவர்.சட்டத்தை வடிவமைத்து அதன்மூலம் உலக உயிர்களைத் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதால் சட்டநாதர் என்று அழைக்கப்படுகிறார்.

சட்டம் என்பது ஆணையென்றும் வழங்கப்படும். உலகின்மீது தமது ஆணையைச் செலுத்தி அதன்படி நடக்க வைப்பதால், வைரவருக்கு ஆணைக்காரன் என்பதும் பெயராயிற்று.

இனி வைரவருக்குச்சட்டைநாதர் என்ற பெயர் வழங்குவதற்கான காரணத்தைக் காண்போம். இது புராணத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்கும் பெயராகும்.

முன்னொரு காலத்தில் மகாபலி என்னும் அசுரன், சிவபெருமானை உபாசித்து அனேக வரங்களைப் பெற்றுச் சிறப்புடன் வாழ்ந்து வந்தான். அவனது

புகழ்மிக்க வாழ்வைக் கண்டு பொறாமை கொண்ட தேவர்கள், அவனை அழிக்க திட்டமிட்டனர். திருமாலிடம் சென்று அவனை எப்படியாவது அழித்து விடுங்கள் என்று கேட்டுக்கொண்டனர். அவர்களது வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட திருமாலும் அதற்கான சமயத்தை எதிர்பார்த்திருந்தார்.

ஒரு சமயம், மகாபலி மிகப்பெரிய வேள்வி ஒன்றைச் செய்தான். அந்த வேள்வியில் யார் வந்து எதைக் கேட்டாலும், அப்ப டியே தருவதாக அறிவித்தான்.

இதுதான் சமயம் என்று திருமால் வாமன வடிவம் கொண்டு மகாபலிச் சக்ரவர்த்தியிடம் சென்றார். தாம் தவம் செய்ய மூன்றடி மண் வேண்டுமென்று யாசித்தார். அவரது வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட மகாபலி முறைப்படி அவருக்கு மூன்றடி மண்ணை நீர்வார்த்துத் தானமாக அளித்தான்.

தானத்தைப் பெற்ற பிறகு திருமால், தனது வடிவை விண்ணுக்கும் மண்ணுக்குமாகப் பெருக்கிக் கொண்டார். ஒரு காலால் மண்ணையும், மறுகாலால் விண்ணையும் அளந்தபின் அரசே எனது மூன்றாவது அடியை எங்கே வைக்க வேண்டும் என்று கேட்டார். அவன் தனது தலையைக் காட்டி இதன்மீது வைத்துக் கொள்ளுங்கள் என்றான்.

திருமால், தனது திருவடியை அவனது தலை மீது வைத்து அழுத்தி, அவனைப் பாதாளத்திற்குச் செல்லும்படிச் செய்தார். சிரஞ்சீவியும், பரமபக்தனுமான மகாபலி பாதாளத்திற்குச் சென்றபோது, சிவபெருமான் அங்கே அவனுக்குப் புதிய மாளிகையை அளித்து அதில் இன்பமுடன் எந்நாளும் இருக்கும் வரமும் தந்தார்.

மகாபலியைப் பாதாளத்திற்கு அழுத்தியபின் அவனை வென்றுவிட்ட மகிழ்ச்சியால் திருமால், ஆர்ப்பரித்து அட்டகாசம் புரிந்தார். அவரது அட்டகாசத்தைப் பொறுக்க முடியாத தேவர்கள் சிவபெருமானைச் சரணடைந்தனர்.

சிவபெருமானின் அம்சத்திலிருந்து வடுகநாதர் வெளிப்பட்டார். அப்போது அவர் எட்டு வயது பாலகன் வடிவில் இருந்தார்.

அவர் விரைந்து சென்று திரிவிக்கிரமராக நிற்கும் திருமாலைப் பாய்ந்து பிடித்து அவரது தோலை உரித்தார். உரித்த அத்தோலை சட்டையாக அணிந்தார். அவரது எலும்புகளை எடுத்துக் கட்டித் தண்டமாக்கிக் கொண்டார். அவரது சதையையும், ரத்தத்தையும் மேற்பூச்சாகப் பூசிக் கொண்டார். உடலை இழந்து திருமால் துன்பமடைந்தார். திருமாலின் தோலானது அவருக்கு முழங்கால் அளவானதாகவே இருந்தது. அது மார்பையும் வயிற்றையும் முழுவதுமாக மூடுவதற்கு ஏற்றதாக இல்லாமல் சிறியதாகவே இருந்தது. அவர் அணிந்திருக்கும் அந்தச் சட்டை எட்டும் எட்டாத சட்டையாக இருந்தாலும், அதன் பெயரால் அவர் சட்டைநாதர் என்று அழைக்கப்படுகிறார்.

மற்றுமோர் கதையின்படி, இரண்யனை அழித்து அட்டகாசம் புரிந்த நரசிம்ம மூர்த்தியைப் பிடித்து உரித்துச் சட்டையாக அணிந்ததாகவும் கூறுவர். இப்படி சட்டை அணிந்த காரணத்தால் வைரவர் சட்டைநாதர் என்றழைக்கப்படுகிறார்.

சட்டைநாதர் என்ற பெயரானது புராணத்தோடு ஒட்டியதாகவும், பைரவரின் பெருமையையும் ஆற்றலையும் விளக்குவதாகவும் இருக்கிறது. என்றாலும் அவரது

தனியாண்மையை விளக்குவதாகவும், உயிர்களைக் கட்டுப்படுத்தி அடக்கி ஆளும் தன்மையை விளக்குவதாகவும், இருப்பது சட்டநாதர் பெயரேயாகும். சட்டநாதர் என்பதே அவருக்கு உரிய உயர்ந்த பெயராக வழங்குகிறது.

இவை இரண்டைத் தவிர, சட்டநாதர் என்பதற்கு மூன்றாவதாக ஒரு பொருளும் சொல்லப்படுகிறது. ஆதியில் தெய்வங்களின் திருவுருவில் அருட்சக்தி நிலையாக இருந்து அருள்புரிவதற்கு அத்திருவுருவங்களைச் சட்டமிட்டுக் காக்க வேண்டும் என்று நம்பினர். இங்கு சட்டமிடுதல் என்பது தெய்வத் திருவுருவின் மீது புனுகு எண்ணெயைப் பூசி வழிபடுவதாகும். புனுகு நெய் உயர்ந்த பொருளாகவும் தெய்வீக சக்தியைச் சிலைகளில் நிலை நிறுத்தி வைக்கும் ஆற்றல் கொண்டதாகவும் கருதப்பட்டது. அதனால் தெய்வங்களின் திருவுருவத்தின் மீதும் புனுகு நெய்யைப் பூசி வழிபட்டனர். இதற்குச் சட்டம் சாத்துதல் என்பது பெயர்.

மதுரை சோமசுந்தரப் பெருமானுக்குப் புனுகு நெய் சொக்கர் என்பது பெயராகும். திருப்பரங்குன்றில் முருகனுக்குப் புனுகு நெய்யும் அவரைச் சுற்றியுள்ள திருவுருவங்களுக்குச் சாம்பிராணி தைலமும் பூசப்படுகிறது. (புனுகு எண்ணெய்க்கு அடுத்தபடியாக சாம்பிராணித் தைலம் பூசுவது சிறப்பாகப் போற்றப்படுகிறது.)

மற்றைய தெய்வங்கள் புனுகு நெய்யைப் பூசி மகிழ்ந்திருந்தாலும் ஆகாச வைரவருக்கு மட்டுமே புனுகுச் சட்டத்தின் பெயரால் சட்டநாதர் என்ற பெயர் வழங்குகிறது.

இவ்வகையில் சட்டம் இயற்றி உலக மக்களை அதற்குக் கட்டுப்பட்டு வாழச் செய்வதால், சட்டநாதராகவும்,திருமாலின் தோலைச் சட்டையாக அணிந்து வீரத்தை வெளிப் படுத்தியதால் சட்டைநாதராகவும், புனுகுச் சட்டத்தை மேனிக்குப் பூசிக் கொள்வதால், சட்டநாதர் எனவும் வைரவர் சிறப்பான பெயர்களைக் கொண்டிருக்கின்றார்.

ஷெண்பகச் செல்வன்



பைரவ வழிபாட்டில் ஷெண்பக மலர்கள் முதலிடம் பெறுகின்ற வைரவ மூர்த்தங்கள் ஷெண்பக மாலையை விரும்பி அணிகின்றனர். சட்டநாதர் ஷெண்பக வனங்களில் உலவுகின்றார். அம்மலர்களின் வாசனையில் மகிழ்கின்றார். திருச் செங்காட்டங்குடியில் ஷெண்பகப் பூ திருவிழா என்னும் சிறப்புவிழா நடை பெறுகிறது. கார்த்திகை மாதத்து வளர்பிறை சஷ்டி சட்டநாத சுவாமிக்கு உரிய சிறப்பு நாளாகும். அதனை பைரவர் ஆலயங்களில் ஷெண்பக சஷ்டி என்று சிறப்புப் பெயரிட்டுக் கொண்டாடுகின்றனர். ஷெண்பக் பூக்களைக் கொண்டு சட்டநாதரை வழிபடுவதால் செல்வம் சேரும்.மனமகிழ்ச்சி உண்டாகும். அம்பர் சட்டநாதர் ஆலயம் அமைந்துள்ள பகுதிக்கு ஷெண்பகாரண்யம் என்னும் பெயர் வழங்கி வந்துள்ளது.

சட்டநாதரின் மாணிக்கக் கந்தை

ஆடை மனிதனுக்கு அழகைத் தருவதுடன், மானத்தைக் காப்பதாகவும் இருக்கிறது. ஆடை இல்லாத மனிதன் அரைமனிதன் என்பது பழமொழியாகும். மானுடர்கள் மட்டு மின்றி அவன் போற்றி வணங்கும் தெய்வங்களும் சிறப்பு மிக்க ஆடை, அணிகலன் களை அணிந்துள்ளனர். அணிந்திருக்கும் ஆடைகளின் பெயராலேயே தெய்வங்கள் அழைக்கப் படுவதைக் காண்கிறோம். திருமால் மஞ்சள் வண்ண ஆடைகளை அணிவதால், பீதாம்பரதாரி (பீதம்-மஞ்சள்) என்றும் முருகன் சிவந்த ஆடைகளை அணிவதால் செய்ய ஆடையன் என்றும், சிவபெருமான் புலித்தோலாடையை அணிந்திருப்பதால் புலித்தோலாடைப் புனிதன் (வியாக்ராம்பரன்) எனவும் அழைக்கப்படு கிறான். இது அவரது வீரத்தை உணர்த்தும் ஆடையாக இருக்கிறது.



அவர் சில சமயங்களில் நிர்வாணமாகத் தோன்றுகிறார். அதை நிர்வாணம் என்று சொல் லாமல் திசைகளையே ஆடையாக அணிந்தி ருப்பதாகக் கூறுகின்றனர். திசைகளை ஆடை யாக அணிந்திருப்பதால் அவர் திகம்பரன் எனப் படுகிறார். திக் என்பதற்குத் திசை என்பதும், அம் பரம் என்பதற்கு ஆடை என்பதும் பொருளாகும்.

சிவபெருமானின் அம்சங்களான பிட்சா டனர், வைரவர் கோலங்களில் ஆடையின்றித் திகம்ப ரராகவே காட்சிதருகிறார். பொதுவாகச் சிவபெரு மானின் பைரவ வடிவங்கள் அனைத்துமே திகம்பர கோலத்துடன் இருப்பவை களாகும். என்றாலும் அவர் வடுகனாக வரும்போது உடலோடு ஒட்டிய ஆடை ஒன்றை அணிந்து வருகிறார். அந்த ஆடைக்குச் சட்டை என்பது பொதுப் பெயராகும். மேலும், மாணிக்கக் கந்தை, கஞ்சுகம் என்னும் பெயர் களும் வழங்குகின்றன. இந்தப் பெயர் களின் சிறப்பையும் பெருமைகளையும் அறிந்து மகிழலாம். முதலில் கந்தை என்னும் சொல்லைப் பார்ப்போம்.

முன்னாளில் **கந்தை** என்ற சொல் உயர்ந்த முறையில் தைக்கப்பட்ட, அதி உன்னத விலை உயர்ந்த ஆடையைக் குறிக் கும் சொல்லாக இருந்தது. ஆனால் அது இப்போது அங்கங்கே கிழிந்து நைந்து உடுத்துவதற்குப் பயனற்றதாக இருக்கும் அழுக்குத் துணியைக் குறிக்கும் சொல்லாக இருக்கிறது.

நாற்றம் என்ற சொல் பழங்காலத்தில் வாசனையைக் குறிக்கும் உயர்ந்த சொல் லாக இருந்து, இப்போது துர்நாற்றத்தைக் குறிக்கும் வகையில் இழிந்த பொருள் தரும் சொல்லாகி விட்டதைப் போலவே கந்தை என்பதும் உயர்ந்த ஆடைகளைக் குறிக்கும் சொல்லாக இருந்து கால ஓட்டத்தில் கிழிந்த துணியைக் குறிக்கும் சொல்லாகி விட்டது என்கின்றனர். பழம்பெரும் பழமொழி களில்,

கந்தையானாலும் கசக்கிக் கட்டு,
கூழானாலும் குளித்துக் குடி

என்பது ஒரு பழமொழி. இதற்குப் பொருள் எழுதியவர்கள் எல்லோரும் கந்தையாகக் கிழிந்து நைந்து போன துணி யாக இருந்தாலும் துவைத்து அணிய வேண் டும் என்றும், கூழ் போன்ற எளிய உண வாக இருந்தாலும் குளித்து உடலைத் தூய்மை செய்து கொண்ட பிறகே உண்ண வேண்டும் என்றும் எழுதுகின்றனர்.

இந்தப் பழமொழியின் பின்னால் உள்ள பகுதிக்கு வேண்டுமானால் உரை பொருத்தமாக இருக்கிறது. முன்னால் உள்ள பகுதிக்குச் சொல்லப்பட்டுள்ள உரை தான் சரியாக இல்லை. கந்தையானாலும் என்பதற்குக் கிழிந்த ஆடை என்று கொள் ளாமல் விலை உயர்ந்த ஆடையென்றே பொருள் கொள்ள வேண்டும். எவ்வளவு விலை உயர்ந்த வனப்பு மிக்க ஆடையாக இருந்தாலும் அதைத் தோய்த்து உலர்த்திய பின்னரே அணிய வேண்டும் என்பதே உண்மையான பொருளாகும்.

இனி, கந்தை என்ற சொல்லின் பொரு ளைக் காண்போம்.

கந்தை என்னும் சொல் கந்து என்ற சொல்லில் இருந்து வந்ததாகும். கந்து என்ப தற்குப் பொருந்தியிருத்தல், பல துண்டு களாக இருந்து சேர்க்கப்பட்டு முழுமை பெறுதல் என்ற பலவாறான பொருட்க ளைத் தரும் சொல்லாகும்.

இறைவன் பொருந்தி இருந்து அன்பர் கள் செய்யும் வழிபாட்டை ஏற்றுக் கொண்டு, அவர்களுக்கு அருள்புரியும் நெடுந் தூணுக்குக் கந்தழி என்ற பெயர் வழங்கு கிறது. பெரிய மரச்சோலைகளுக்கு இடையே அமைந்ததும், இறைவன் நிலை பெற்று இருப்பதுமான தூணே முன்னா ளில் கந்தழி எனப்பட்டது. அதையொட்டிச் சிவபெருமான் கந்தழீச்சுரர் என்று அழைக் கப்படுகிறார். குன்றத்தூரில் கந்தழீசுவரர் என்னும் பெயருடன் அருள்பாலிக்கும் சிவபெருமானின் கோயில் இருக்கிறது. கந்தில் இருந்தே கந்தழி என்ற சொல் பிறந்தது.

சிவபெருமானின் நெற்றிக் கண்களில் இருந்து வெளிப்பட்ட ஆறு தீப்பொறி களில் இருந்து ஆறுகுழந்தைகளாக உருப் பெற்ற முருகனை உமையன்னை தழுவி ஆறுமுகங்களும் பன்னிரு தோள்களும் உடைய ஒரே குழந்தையாக்கினாள். அவனுக்குக் கந்தன் எனப் பேர் புனைந் தாள். ஆறு திருவுருவங்கள் இணைந்து உருவானதால் அவன் கந்தன் எனப் பட்டான்.

இவற்றின் மூலம் கந்து என்பது பல கூறுகளாகப் பிரிந்து இருந்தது ஒன்று

சேர்க்கப் பட்டது, பொருந்தியிருப்பது முதலான பொருளைத் தருவதை அறிய முடிகிறது. இதையொட்டி, வெட்டித் தைத்து ஒன்று சேர்க்கப்பட்டதும், பூவேலைகள் செய்யப்பட்டு வனப்பூட்டுவதும், உடலோடு ஒட்டியவாறு(Tight Shirt) இருப்பது போல் தைக்கப்பட்டதுமான ஆடைக்கே கந்தை எனப் பெயர் வழங்கியதை அறிய முடிகிறது.

வைரவமூர்த்தி தன் உடலோடு ஒட்டிய வாறு அணிந்துள்ள சட்டைக்குக் கந்தை என்பதுபெயர். அது மாணிக்கவண்ணத்தில் சிவப்பாக இருப்பதால், மாணிக்கக் கந்தை என்று அழைக்கப்படுகிறது. அதனைக் கஞ்சுகம் எனவும் அழைப்பர்.

சிறுத்தொண்டருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் அருள்புரிய வந்த சிவபெருமான், கஞ்சுகம் என்ற ஆடையை அணிந்து வந்ததாகச் சேக்கிழார் பெருமான் குறிக்கிறார். பெரியபுராணத்தில் அவர்,

செம்பரிதிக் கடல் அளித்த
செக்கர் ஒளியினை அந்திப்
பம்பும் இருள் செறிபொழுது
படர்ந்தணைந்து சூழ்வதெனத்
தம்பழைய கரியுரிவைக் கொண்டு
சமைத்தது சாத்தும்அம்பவளத்
திருமேனிக் கஞ்சுகத்தின் அணிவிளங்க

என்று குறித்துள்ளார்.

இதன்பொருள் : சிவந்த சூரியனின் பேரொளியை மாலைவேளையில் இருள் வந்து மூடுவது போல், சிவபெருமானின் சிவந்த பவளத் திருமேனியை அவர் அணிந்திருந்த கருஞ்சிவப்புக் கஞ்சுகம் மூடியிருந்ததாம். சிவபெருமான் தன்னிடமிருந்து பழைய யானைத்தோலையே அழகுபெற கஞ்சுகஆடையாக்கித் திருமேனியில் அணிந்து வந்தார் என்கிறார் அவர்.

திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டருக்குப் பிள்ளைக்கறி கேட்டு அருள் செய்ய வந்த வடுக நாதர் (உத்திராபதியார்) தனிச் சந்நிதியில் அழகிய உலாத் திருமேனியாக எழுந்தருளியுள்ளார். இவர் திருமேனியிலேயே அழகிய கஞ்சுகத்தை அணிந்திருக்கிறார் என்றாலும், சித்திரை ஐப்பசி பரணி நாட்களில் இவர் விழா கொள்ளும் வேளையில் மாணிக்கக் கந்தை என்னும் ஆடை அணிவிக்கப்படுகிறது.

அது கருஞ்சிவப்பு நிறத்தில் அமைந்திருக்கிறது. அணிவிப்பதற்கு எளிதாக இருக்க முன்னும், பின்னும் தனித்தனியாக உள்ளன. ஆடை முழுவதும் பூவேலை செய்யப்பட்டுள்ளது. ஆடையின் கீழ் நுனியில் வெள்ளியாலான அரசிலைகள், முத்துக்கள் தொங்கல்களாக அமைந்துள்ளன. இது வைரவருக்கே உரிய சிறப்பான ஆடையாக உள்ளது.

மாணிக்கக் கந்தை எனப்படும் கஞ்சுகத்தை அணிந்திருக்கும் அவரது அழகைக் கண்டு மகிழ்வது மனதிற்கு இதமாக இருக்கிறது.

சீர்காழில் உள்ள வடுகநாதரின் உற்சவத் திருமேனி, முத்துச்சட்டநாதர் என்று அழைக்கப்படுகிறது. அவர் வலம்புரிச் சங்கிலி ருந்து கிடைக்கும் ஒப்பற்ற முத்துக்களால் ஆன சட்டையை அணிந்திருந்ததால், அவருக்கு முத்து சட்டநாதர் என்பது பெயரா யிற்று என்கின்றனர்.

வடுகமூர்த்தி உடலோடு பொருந்தியிருப்பதும் உள்ளே சிவப்பும், மேலே கருப்பும் ஆன நிறங்கொண்டதும், முத்து போன்ற நவமணிகளையும் பொற்சரிகை களைக்

கொண்டு வனப்பூட்டப்பட்டது மான ஆடைகளை அணிந்திருக்கின்றார். அவை மாணிக்கக் கந்தை, கஞ்சுகம் என்ற பெயர் களைப் பெற்றுள்ளன என்பதை அறிகி றோம்.

சட்டை (கஞ்சுகம்) அணிந்த வீரர்கள் அரசனுடைய பாதுகாவல் படையில் இருந்தனர். இலக்கியங்களை இவர்களைக் கஞ்சுகமாக்கள் என்று அழைப்பதும் இங்கே சிந்திக்கத் தக்கதாகும்.

சட்டைநாதரின் சட்டை

சட்டநாதர் வழிபாடு அன்பர்களி டையே பலநிலைகளில் இருக்கிறது. சட்ட நாதரை அறத்தின் கடவுளாகவும், ஆபத்தில் இருந்து காப்பவராகவும் போற்றுபவர்கள் அவர் நீண்ட கருப்புச் சட்டையை அணிந்து வருவதாகவே கூறுகின்றனர்.

சில பாடல்களில் இவர் கருப்புச் சட் டைஅணிந்ததாகக் கூறப்பட்டுள்ளது.சேக்கி ழார் இவரது செந்நிற மேனியை கருப்புச் சட்டை மூடுவது மாலைக் காலச்சூரியனை இருள் வந்து மூடுவது போல் இருக்கிறது என்று கூறுவது இங்கே சிந்திக்கத் தக்கதாகும்.

அவரை வீரதீர உக்கிரக் கடவுளாகக் கொண்டாடும் புராணக்காரணர்கள் அவர் போரிட்டு திருமாலை வாமன நரசிங்க அவ தாரங்களில் அடக்கி அவர்களது, தோலை உரித்துச் சட்டையாக அணிந்ததாகக் கூறு கின்றனர்.அவர்கள் இதனைப் பச்சைச் சட்டை என்கின்றனர்.

இங்கே இதைப் பச்சை நிறமுள்ள சட்டை என்று கொள்ளக் கூடாது. இரத்தம் சொட்டிக் கொண்டிருப்பதானஅப்போது தான் உரித்த தோலாலான சட்டை என்றே கொள்ளவேண்டும்.சிவபெருமானை ஈர்உரி தோல் அந்தணன் என்றுபோற்றுவது இங்கே சிந்திக்கத் தக்கதாகும்.ஈர்உரி என்பதற்கு அப்போதுதான் உரித்து இரத்தம் சொட்டும் ஈரமான தோல் என்பது பொருளாகும்.


சட்டநாதர் துதி நூல்களில் அவர் இத்த கைய பச்சைச் சட்டை அணிந்திருப்பது பல இடங்களில் குறிக்கப் பட்டுள்ளது.

சட்டநாதரை ஊழி முதல்வனாகக் கொள்பவர்கள் பிரளய காலத்தில் அவர் பொங்கும் கடல் மீது விண்ணுக்கும் மண் ணுக்குமாக நிற்க, வானமே ஆடையாகவும் அதில் நட்சத்திரங்கள் பூவேலைப் பாடா கவும் இருப்பதாகக் கொள்வர்.இதைக் குறிக்கும் வகையில் அவருக்கு நீலத் துணி யில் தங்க வெள்ளிச் சரிகைகளால் புனையப் பட்ட பூக்களைக் கொண்ட ஆடைகளை அணிவிக்கின்றனர். இதற்குச் சித்ராம்பரம் என்பது பெயர். (சித்திரம்-பூவேலை, அம் பரம்-ஆடை)

திருச்செங்காட்டங்குடியில், சிறுத் தொண்ட நாயனாருக்கு அருள்புரிய உத்ரா பதியாராக வந்த சிவபெருமான் நீண்ட அங்கியை அணிந்து வருகிறார். இதைக் குறிக்கும் வகையில் இப்போதும் உத்திரா பதியார் வீதியுலா வரும் போது கருஞ்சிவப் புச் சட்டை அணிவிக்கப்படுகிறது. இதற்கு மாணிக்கக் கந்தை என்பது பெயராகும்.

இந்தக் கருத்துக்கள் மூலம் சட்டை நாதரான சட்டநாதரின் நீண்ட அங்கி போன்ற சட்டை அன்பர்களின் வழிபாட் டிற்கு ஏற்பப் பல வகைகளில் இருப்பதை அறிய முடிகிறது.

வைரவர் வழிபாட்டில் பலிபீடங்கள்



மூன்னாளில் ஆலயங்களில் வீற்றிருக்கும் தெய்வங்களுக்கு மக்கள் தாம் நேர்ந்து கொண்ட உயர்ந்தபொருட்களை எடுத்து வந்து கோயிலின் முன்னுள்ள அகன்ற பீடத்தில் வைத்து விடுவது வழக்கம். இப்படி அளிக்கப்படும் பொருட்களுக்குப் பலி என்பது பெயர்.தெய்வங்களுக்கு அளிக்கப் படும் உயர்ந்த உணவுப் பொருளுக்குப் பலி என்பது பெயர். மேலும், உயர்ந்த மதிப்புடன் அளிப்பது என்பதும் இச்சொல்லுக் குப் பொருளாகும்.

இந்தஅகன்ற பீடமே பின்னாளில் பலி பீடங்களாயின. மக்கள் உயர்ந்த மலர்களையும், காணிக்கையாகக் கொண்டுவந்து அளித்தனர். இதற்குப் புஷ்ப பலி என்பது பெயராகும்.

கோயில்களில் ஆகம விதிமுறைகள் மேலோங்க மேலோங்க பண்டைய புஷ்ப பலி போன்ற பலிகள் வழக்கொழிந்தன. அதற்குப் பதிலாக தெய்வத்தின் பரிவார கணங்கள் வீற்றிருந்து பூசை கொள்ளுமிடமாக பலிபீடங்கள் ஆகிவிட்டன.

சிவன், திருமால், முருகன், விநாயகர், காளி போன்ற தெய்வங்களின் ஆலயங்களில் கருவறைக்கு நேர்எதிரில் அமைந்திருக்கும் அந்த தெய்வத்தின் வாகனத்திற்குப் பின்புறம் தனி மேடையில் பலிபீடங்கள் இருக்கின்றன. இவற்றிற்குத் தனி முக்கியத்துவம் ஏதுமில்லை. விழாக் காலங்களில் மட்டும் இவற்றில் பூசை நடைபெறுகிறது. தினமும் பூசைக்குப் பிறகு நிவேதனத்தில் ஒரு படியை எடுத்து இதன்மீது வைத்து காக்கைக்கு இடுவது வழக்கம். நித்திய ஸ்ரீபலி விழா நடத்தும் தலங்களிலும் பலி பீடங்கள் வழிபாட்டின் போது மட்டுமே பயனாகின்றன.

சட்டநாதர் வழிபாட்டில் மட்டும் பலி பீடங்கள் தனது பழமை நிலையில் மாறாது இருக்கின்றன. சட்டநாதர் ஆலயங்களில் பலிபீடம் உயர்ந்த மேடை மீது அவருக்கு முன்பாக நிலைப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் சட்டநாதருக்குரிய அனைத்து அபிஷேக அலங்காரங்களும் இந்த பலி பீடத்துக்கே செய்யப்படுகின்றன. சட்ட நாதரும் அவரது கணங்களும் வீற்றிருந்து பூசை கொள்ளுமிடமாக இந்தப் பலி பீடங்கள் இருக்கின்றன. சட்டநாதர் வழிபாட்டில் பலிபீடங்கள் பெற்றுள்ள சிறப்பை இங்கே காணலாம்.

சட்டநாதர், வடுகர் எனப்படும் வைரவ மூர்த்தங்கள், எப்போதும் மிக உயரமான இடத்தில் அமைக்கப்படுகின்றன.

ஸ்ரீவிமானங்களின் கிரீவப்பகுதி, பெரியமண்டபங்கள், கோபுரங்களின் தெற்கு முகப்பு ஆகியவற்றின் மீதுள்ள



அமைந்திருக்கின்றன. மக்கள் இவற்றைச் சிறப்புடன் வழிபடுகின்றனர்.

சீர்காழியில் சட்டநாதருக்கு நேரே தெற்குப் பிராகாரத்தில் அகன்ற பெரிய பலிபீடமும் இருக்கிறது. வெள்ளிக்கிழமை இரவு அதற்குச் சிறப்புப் பூசைகள் நடத்தப்பட்டு மகா தீபாராதனை செய்யப்படுகிறது.

சீர்காழியில் எட்டுத் திக்கிலும், எட்டு பலி பீடங்கள் நிலைப்படுத்தப்பட்டுள்ளன. (இப்போது இரண்டே உள்ளன) இவற்றைக் கணநாதர் கோயில் என்று அழைக்கின்றனர். (விநாயகருக்குக் கணநாதன் என்னும் பெயர் இருப்பதால் இப்போது இவற்றை விநாயகர் கோயில் என்பதுடன் அதன் விமானங்களில் விநாயகர் சிலையையும் அமைத்துள்ளனர். விநாயகர் வேறு.வைரவ வழிபாட்டிலுள்ள கணநாதன் என்பது வேறாகும். பெயர் ஒற் றுமையால் ஏற்பட்ட குழப்பம் இதுவாகும்.) இப்படியே பல நிலைகளில் பைரவர் வழிபாட்டில் பலி பீடங்கள் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன.

பைரவ அடியவர்களின் சமாதித் தலத்திலும் பலிபீடமே அமைக்கப்பட்டு வழிபடப்படுகிறது. எடுத்துக்காட்டாக, நாகப்பட்டினத்தில் சட்டநாதர் ஆலயத்தில் சுவாமிக்கு முன்பாக பலிபீடம் உள்ளது. அதற்கே நித்திய அபிஷேக அலங்காரங்கள் செய்யப்படுகின்றன. கோயிலுக்கு நேர் எதிரில் தெருவின் நடுவில் அழகிய மேடை மீது பலிபீடம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் சட்டநாதரின் பக்தரான சோழீசுவர முடையார் சமாதி ஆனதாகக் கூறுகின்றனர்.

பகுதியிலேயே அவர் எழுந்தருளுகின்றார். அவரது திருவுருவத்தைக் கல்லால் அமைக்கும் வழக்க மில்லை. கடுசர்க்கரைப் படி மம் என்னும் சுதைச் சிற்பங்களாகவே அமைக்கின்றனர்.

அவர் உயரமான இடத்தில் இருப்பதாலும், கடுசர்க்கரைப் படிமமாக இருப்பதாலும், அவருக்குரிய அபிஷேக அலங்கார பூசைகளை அவருக்கு நேர் எதிரில் அர்த்தமண்டபத்திலோ அல்லது பிராகாரத்திலோ அழகிய மேடை மீது அமைக்கப்பட்டிருக்கும் பலிபீடத்திற்கே செய்யப்படுகிறது.

அஷ்டபூதர்களாலும், ஆறு பலிதேவர்களான பூதங்களாலும், இந்தப் பலிபீடம் தாங்கப்படுகிறது. மேலும் பைரவரின் பிரதம கணங்களும் இதில் வீற்றிருக்கின்றனர். சீர்காழி, திருவிடை மருதூர், இன்னம்பர், அம்பர் கயிலாயநாதர் கோயில் முதலிய அனேக தலங்களில் உயரமான இடங்களில் வைரவ மூர்த்தியும் அவருக்கு நேர் எதிரில் அவரது பூசைக்குரிய பலிபீடங்களும்

வடுகநாதர் என்கின்ற சட்டநாதன்

சட்டநாதருக்குரிய பெயர்களில் வடுகன் என்பதும் ஒன்றாகும். சீர்காழியில் எழுந்தருளியிருக்கும் சட்டநாதருக்குரிய பெயர்களில் வடுகன் என்பது சிறப்புப் பெயராக இருக்கிறது. இவர்மீது பாடப் பட்டுள்ள துதியில் திரும்பத் திரும்ப வடுகன் என்ற பெயர் குறிக்கப்பட்டுள்ளது. அன்பர்கள், இந்த வடுகன் என்ற சொல் லுக்குப் பலவிதமான அர்த்தங்களைக் கூறு கின்றனர்.


முதலில் வடுகன் என்பதற்கு வடக் கன், வடக்கு தேசத்திலிருந்து வந்தவன் என்று பொருள் கொள்ளுகின்றனர். இங்கு வடக்கு என்பது வடதிசையில் இருக்கும் வான் கயிலாயத்தைக் குறிக்கும் சொல் லாகும். ஸ்ரீகயிலாயத்திலிருந்து அன்பர் களுக்கு அருள்பாலிக்க வீரம் மிகுந்த அடியவர் கோலத்தில் வந்த சிவபெருமா னை வடக்கன் என்றும், வடுகன் என்றும் பெயர் பெற்றதாகக் கூறுகின்றனர். வடக்கன் என்பதே வடுகன் ஆனதென்பர்.

கேரளாவில் உள்ள திருச்சூர் (திருச் சிவப்பேரூர்) என்னும் தலத்தில் வீற்றிருக் கும் சிவபெருமான் வடக்கு நாதர் என்றும் அழைக்கப்படுவதும் இங்கே சிந்திக்கத் தக்கதாகும்.

திருச்செங்காட்டங்குடியில் சிறுத் தொண்டருக்கு அருள்புரிய சங்கமராக வந்த சிவபெருமானின் பைரவர் கோலம் உத்ரா பதியார் என்று அழைக்கப்படுகிறது. தமி ழில் வடக்கன் என்பதே வடமொழியில் உத்ராபதியார் என வழங்குகிறது. திருச்செங் காட்டங்குடியில் உத்ராபதியாராக இருப் பவர் வடுக மூர்த்தியே ஆவார்.

மேலும், வடம் என்பதற்குப்பரந்து விரிந்தி ருப்பது என்பதும் பொருளாகும். பரந்து விரிந்திருக்கின்ற ஆல மரத்தை வடம் என்ற சொல்லால் குறிக்கிறோம். சிவபெருமான் வீற்றிருக்கும் ஆல மரம் வடஆல் என்றும், கயாவிலுள்ள அழிவற்ற ஆலமரம்வடவிருட்சம் என்றும் அழைக்கப் படுவது இங்கே சிந்திக்கத் தக்க தாகும்.

மேலும், வடம் என்பது உறுதியான ஒன்றை இழுத்துச் செல்வதைக் குறிக்கிறது. தேரை இழுத்துச் செல்லும் உறுதியாக கயிறு களை வடம் என்று அழைக்கின்றனர். வானத்தில் பரந்து விரிந்து நிறைந்திருப் பதாலும், அசையாதவற்றையும் எளிதில் அசைத்து இடம் பெயரச் செய்பவனுமான பைரவ மூர்த்தியே வடக்கன் எனப்பட்டு வடுகன் ஆனான் என்கின்றனர்.



வடமொழியில் வடு என்ற சொல் இளைஞனையும், வது என்ற சொல் இளம் பெண்ணையும் குறிப்பதாகும். என்றும் மாறாத இளைஞனாக இருப்பதால் சட்ட நாதர் வடுகன் எனப்பட்டான். சட்ட நாத ரை வடுகன் வடுகநாதன் என்று அழைக் கின்றனர்.

வடக்கன் என்ற சொல்லில் இருந்து பிறந்த வடுகன் என்ற சொல்லே பைரவரின் பெருமைகளை விளக்குவதாக இருக்கிறது. வடக்கு என்பதற்கு மேலே நோக்கியது என்பதும் பொருள். எல்லாவற்றிற்கும் மேலாக ஆகாயத்தில் இருப்பதாலும் சட்ட நாதர் வடக்கன் எனப்பட்டு வடுகன் ஆனார் என்கின்றனர்.

தமிழகத்திற்கு வடக்கேயுள்ள (இன் றைய ஆந்திர, கன்னட) மாநிலங்களில் இருந்து குடியேறிய மக்கள் வடுகர் எனப் பட்டனர். இவர்கள் இப்போது தெலுங்கு வடுகர், கன்னட வடுகர் என்றும் அழைக் கப் படுகின்றனர். இந்த வடுகர்களுக்கும் பைரவ சமயத்தவர் கூறும் வடக்கனுக்கும் தொடர்பு ஏதும் இல்லை.

நடுநாட்டுத் தலங்களில் ஒன்றாக இருப் பது வடுகூர் என்பதாகும். வடுகன் சிவ பூசை செய்ததலம் என்பதால் அது வடுகூர் ஆனது. பைரவருக்கு ஆண்டவர், ஆண்ட பிள்ளையார் என்ற பெயர்கள் வழங்குவதை ஒட்டி இவ்வூர் இப்போது ஆண்டார் கோயில் என்று அழைக்கப் படுகிறது.

இவற்றின் மூலம் வடுகன் என்பது இளைஞன், வடக்கிலிருந்து வந்தவன், விரிந்து பரந்திருப்பவன், அசையாது நிற்ப வற்றையும் இழுத்து அசைப்பவன் என்ற பல பொருளைத் தருவதைக் காண லாம். இவை யாவும் பைரவரான சட்டநாதருக்கு உரிய பெயர்களாகும்.

வடுகன் என்ற பெயர் கோயில் வழக்கத்தில் அதிகமாக இல்லாவிட்டாலும் அது மிக உயர்ந்த பொருள் பொதிந்த பெயராகப் பெருமானுக்கு வழங்குகிறது. சிவபராக் கிர மத்தில் பைரவர் வடுகமூர்த்தி என்று குறிக்கப்பட்டுள்ளார்.

மக்கள் வடுகன், வடுகநாதன், வடுகரத்தினம், வடுநாச்சி என்று பெயர் சூட்டியுள்ளனர். வடுக சாத்து, வடுகன் பட்டி, வடுகூர், வடுகமங்கலம் எனும் பெயர்களில் ஊர்கள் இருக்கின்றன.

வடுகன் அருளால் மேலான வாழ் வைப் பெறுவோம்.

ஸ்ரீ விமானத்துப் பரமசுவாமி

ஆலயங்களில் கருவறை மீது அமையும் கூம்பு வடிவக் கட்டிடமே ஸ்ரீவிமானம் எனப் படுகிறது. இதில் சிறப்பு மூர்த்திகளை எழுந்தருளி வைத்து வழிபடுவது வழக்கம். குடந்தை நாகேசுவரத்து ஸ்ரீ விமானத்தில் செல்வப்பிரான் எனப்படும் உமாமகேச மூர்த்தியையும், திருத் துறையூரில் ரிஷபாரூட மூர்த்தியும் (இப்போது இல்லை) திருப்பதியில் வெங்கடாசலபதியும், விமான மூர்த்திகளாக இருக்கின்றனர். இவர்களுக்குத் தனி நிழல் அமைப்பு இல்லை. வெயிலில் காய்வதும், மழையில் நனைவதும் இவர்களின் நிலையாகும். ஆனால், சட்டநாதர் விமானத்தில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தியாக இருந்தாலும் அவர் மீது மழை வெய்யில் படா மல் சிறுசந்நிதி அமைத்தும் அச்சந்நிதி மீது ஒற்றைக் கலசம் கொண்ட சிறு விமானத்தை அமைப்பது வழக்கமாகும். பல இடங்களில் சடடநாதர் சந்நிதியை முன்புறம் வளர்த்திக் கட்டியிருப்பதுடன் அவர் அருகே சென்று வழிபட படிகளும் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

குரு- லிங்க- சங்கமர் வழிபாட்டில் சட்டநாதர்

சைவ சமயத்தில் குரு-லிங்க- சங்கம வழிபாடு என்பது சிறப்பாகப் போற்றப்படுகிறது. குரு என்பவர் தன்னைச் சார்ந்த அன்பர்களின் அஞ்ஞானத்தை நீக்கி நல்வழி காட்டி மேலான வாழ்வை வாழவைப்பவர். அவர் அருளால் செல்வமும், செல்வாக்கும், அமைதியும் மகிழ்ச்சியும் உண்டா கின்றன. அதனால் குருவைப் போற்றி வழிபட்டு அவரது கட்டளைகளை ஏற்று நடப்பது அன்பர்களின் கடமையாகிறது.தகுதி பெற்றிருப்பவர்களுக்குச் சிவபெருமான் தானே குருவாக வந்து திருவருள் பாலிக்கின்றான்.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் கணநாதர், அப்பூதி அடிகள், பெருமிழலைக் குரும்பர் ஆகியோர் தமது குரு பக்தியினாலேயே முத்தி அடைந்தவர்கள்.



லிங்க வழிபாடென்பது சிவவழிபாடு. சிவபெருமானின் அருவுருவத் திருமேனியான லிங்கத்திற்குப் பூசை செய்து அவர்அருளால் மேன்மையை அடைவது லிங்க வழிபாட்டின் பயனா கும். அறுபத்து மூன்று நாயன் மார்களில் சண்டேசுவரர், கண்ணப் பர், சாக்கிய நாயனார் போன்ற வர்கள் சிவ லிங்கத்தை வழிபாடு செய்து அதன் மூலம் முத்தியைப் பெற்றவர்களாவர்.

சங்கமர் என்பது சிவனடியார்களைக் குறிப்பதாகும். சிவனடியார்களைச் சிவமாகவே போற்றி அவர்களுக்கு வேண்டிய பணிகளைச் செய்து அப்பணியின் புண்ணியத்தால் சிவகதி பெறுதல் இவர்கள் நோக்கமாகும். இவர்கள் சிவபெருமான் மீதுள்ள ஆராதகாதலால் அவருடைய அடியவர்களுக்குச் செய்யும் தொண்டைத் தன்னலமற்ற திருத்தொண்டாகவே செய்கின்றனர். திருநீலகண்டர் அடியவர்களுக்குத் திருவோடு அளித்தும், திருக்குறிப்புத் தொண்டர் ஆடைகளை வெளுத்துக் கொடுத்தும்,அடியவர்களுக்கு உணவிட்டும், கோட்புலியார் அடியவர்களுக்கு உணவும் உடையும் வழங்கி யும் சிவசேவை செய்து அதனால் மேன்மை பெற்றவர்களாவர்.

இதன்மூலம், அன்பர்கள் சிவனடியைச் சேர்ந்து மாறாத இன்பத்தில் திளைத்திருப்பதற்கு வழியாக இருக்கும் முதன்மை பெற்ற மூன்று வழிகளாக இருப்பவை சிவலிங்க வழிபாடு, சிவனடியார் வழிபாடு, குருமார்கள் வழிபாடு என்பதை அறிய முடிகிறது. இதுவே குருலிங்க சங்கம வழிபாடு எனப்படுகிறது.

அன்பர்களை ஆட்கொள்ள வேண்டும்போது சிவபெருமான் தானே ஓர்

அவல் பொரி, வெல்லம் கலந்த தயிர், மாதுளை முத் துக்கள் இட்டதேன்,பால், நெய் யில் செய்த இனிப்புப் பட்ச ணங்கள் போன்ற வற்றை சட்நாதருக்கு நிவேதித்து அன்பர் களுக்கு வழங்கிட வாழ்வில் செல்வமும் மகிழ்ச்சியும் உண்டாகும்.

சிவனடி யாராக வேடம் புனைந்து வருகி றான். அந்தக் கோலமே சங்கமர் வடிவம் எனப் படுகிறது.


சங்கமர் அனைத்துச் சிவன டியார் களை யும் குறிக்கும் சொல்லாகவும் இருக் கிறது. குறிப்பாக, நடைமுறையில் சட்ட நாதரைச் சங்கமர் என்றேஅனைவரும் குறித் துள்ளனர். உண்மையில் சட்டநாதருக்கும்சங்கம வேடத் திற்கும் தொடர்பு இருப்ப தாகத் தெரிய வில்லை.

சட்டநாதர் அடியவர் வேடத்தில்எழுந் தருளும் மூர்த்தியல்ல? அவர் ஆகாசத் தில் உயரமான இடத்தில் இருப்பவர். அடிய வர்களுக்குரிய உடுக்கை ஏந்துதல், கபாலம் தரித்தல் போன்றவை அவர் வடிவில் இல்லை.


அவர் தர்மங்களை உபதேசிக்கும் உபதேசமூர்த்தியாக சின்முத்திரை தரித் தோ, ஆபத்துக்களை விலக்கி அஞ்சேல் என்று சொல்லும் வகையில் அபய முத்திரை காட்டும் அபயதான மூர்த்தியாகவும், மறச்செயல் புரிபவர்களைத் தண்டிக்கும் தண்டாயுதத்தை ஏந்தி தண்டாயுத பாணியா கவுமே அவர் காட்சி தருகிறார்.

என்றாலும், பலர் திரும்பத் திரும்ப அவரை சங்கமர் என்று குறித்துள்ளனர். அது ஏன் என்பது தெரியவில்லை. சீர்காழியைக் குறிப்பிடும்போது அது குருலிங்க சங்கமத் தலம் என்கின்றனர். இத்தலத்திலுள்ள பிரம்மபுரீசுவர லிங்கம், உமைக்கு உப தேசித்துக் கொண்டிருக்கும் தோணியப்பரை குரு வடிவாகவும், சட்ட நாதரை சங்க மரா கவும் கொண்ட இதனைக் குரு லிங்க சங்கமத் தலம் என்கின்றனர். இது போலவே மேலைக்காழி என்றழைக் கப் படும் கருப்பறியலூரையும் குரு, லிங்க சங்கமத் தலம் என்பர். நாகை ஆதி காயா ரோகணத் தலத்தையும் குருலிங்க சங்கமத் தலம் என்கின்றனர். இங்குள்ள ஆதி காயா ரோகணர் லிங்கமாக வும்,தட்சி ணாமூர்த்தி குரு வடிவாகவும், சட்டநாதரை சங்கம ராகவும் கூறுகின்றனர்.

இங்கும் சீர்காழியிலும் சட்டநாதர் அடி யவர் வேடத்தில் வந்து யாருக்கும் அருள் புரிந்ததாக வரலாறு இல்லை. இவற்றின் மூலம் சட்டநாதர் என்பது சிவனின் அடிய வர் வடிவமல்ல. அது உன்னதமான சட்ட திட் டங்களை வகுத்து அதன்படி நடக் கச் செய்யும் அறக்கடவுளின் வடிவம் என்பதை அறியமுடிகிறது.



ஸ்ரீ ஆனந்தவல்லியான கற்பகவல்லி தழுவி நிற்கும்
ஆனந்த சட்டநாதன் அருளினால்எல்லோரும்
எல்லாமும் பெற்று இனிது வாழ்க! வளர்க!!



நன்றிக்குரிய நமது நல்லாதரவாளர்கள்

வேதநிதி.ப்ரம்ம ஸ்ரீ .ஜி. பரமேஸ்வரதீக்ஷிதர்,
சிதம்பரம்

சித்தாந்த ரத்தினம் டாக்டர்.விஸ்வ.ஆறுமுகம்,
மேனாள் விஞ்ஞானி, சி.எல்.ஆர்.ஐ.கிண்டி

இருமொழிச்சீராளர்.திருவையாறு வே. ரமணன்,
இருப்பு, சிதம்பரம்.

மோகன ராஜசிம்ம மகேந்திரன்,
பெருமாளகரம், சென்னை.

திரு. என்.கார்த்திகேயன்.
திருவல்லிக்கேணி.

சிற்பஸ்ரீ சாமி.சுப்பையா ஸ்தபதியார்(குமாரர்)
சிவஸ்ரீ.சுவாமிநாதன் (சிவா),காஞ்சிபுரம்.

டாக்டர்.திருமிகு. T.K.தேவராஜன்
திருமழிசை,சென்னை-124

திரு.வி. ராம்குமார்,
ஸ்ரீவத்சம் கோடம்பாக்கம்.

திருமழிசை. திரு. T.A.பன்னீர்செல்வம்,
இருப்பு இந்திராநகர், சென்னை -20.

சித்தாந்த ரத்தினம் டாக்டர்.C.ரவிசங்கர்,
சற்குரு பல் மருத்துவமனை, புதுவை.

சித்தாந்த ரத்தினம் வி.சி.கோபிநாத்,
ஸ்ரீமங்கலம், பாண்டிச்சேரி

திரு.மோகன்(எ)சபாரத்தினசிவாச்சாரியார்,
மண்ணடி சென்னை-600001

சிவத்திரு.தங்க சொர்ணகுமார்(ரானே),
இராமாபுரம், சென்னை



சிவத்திரு.B.S.R.முத்துக்குமார சிவாச்சாரியார்,
ஸ்ரீபாலவிநாயகர் ஆலயம், வாரன் ரோடு, மயிலை.

குருஜி.கே.கே. கோபாலன் சர்மா
பரமேசுவரி நகர், அடையாறு,சென்னை-20

செல்வத்திருமதி. S. பத்மா
தனலட்சுமி வங்கி, சென்னை

திரு.க.பாஸ்கர்,
நூலகர், ஸ்கூல் ஆப் எக்னாமிக்ஸ், சென்னை

பேரா.பழ.முருகேசன்,
S.A பொறியியல்கல்லூரி, சென்னை,

சித்தாந்த ரத்தினம். இரா.இராமச்சந்திரன்,
நூம்பல்,

திரு.கிருஷ்ணமூர்த்தி.
ஆடிட்டர், கடலூர் .

தேனுபுரீசுவரர்தாசன் இல. சங்கர்
மாடம்பாக்கம், சென்னை- 600 073 .

திருமதி. ஸ்ரீவித்யா ப்ரியா
ஸ்ட்ரீம் லைன் பார்வேடர்ஸ் , சென்னை-1

வாழி நலம் சூழ!


அருள்மிகு அமுதவல்லி உடனாய சந்திரசேகர சட்டநாதர்